பக்கங்கள்
24

# புதுவிதி
PUTHU VITHI

விலை 20/=

புதுமை : 02 | 07 ஒக்ரோபர் 2017 | விதி : 69



# சிக்குவாரா... தப்புவாரா...?



தொண்டைமானாறு



பார்வையைப் பறித்த பச்சை குத்தல்



தம்புவின் கள்




கலியுக தெய்வம் ஷீரடி சாய்பாபா

'யாதும் ஊரே! யாவரும் கேளிர்!!'







வனமகன் படம் மூலம் தமிழில் அறிமுகமானவர் சாயிஷா. இப்படத்தில் அவரின் நடிப்பு பெரிதும் பேசப்பட்டது.

இந்நிலையில, விஜய் சேதுபதியுடன் ஜங்கா படத்தில் ஒப்பந்தமானார் சாயிஷா. இதன் படப்பிடிப்பு வெளிநாடுகளிலேயே அதிகம் இடம்பெறவுள்ளது.

படத்தின் கதைப்படி சாயிஷா பிரான்ஸில் பிறந்து வளர்ந்த பெண்ணாக நடிக்கவுள்ளாராம். இந்தப் படத்திலும் தன் நடிப்பு பெரிதும் பேசப்படும் என அவர் நம்புகிறார்.

வரலாற்றுப் படமாக உருவாகும் சங்கமித்ரா படத்தில் நடிக்க ஒப்பந்தமான ஸ்ருதிஹாசன் திடீரென விலகினார்.

வேறு நாயகிகள் தேர்வு இடம்பெற்றாலும் பொருத்தமான நாயகி கிடைக்கவில்லை.

இந்நிலையில் டோனி படத்தில் திஷா பதானி தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

சுந்தர் சி தற்போது கலகலப்பு படத்தை இயக்குவதால் சங்கமித்ரா படத்தின் பணிகள் டிசம்பர் மாதம் தொடங்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தனுஷ் நடிக்கவுள்ள மாரி - 2 படத்தின் நாயகியாக சாய்பல்லவி ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார்.

வடசென்னை படத்தில் கவனம் செலுத்தி வரும் தனுஷ் இப்படம் நிறைவடைந்ததும் மாரி படத்தில் கவனம் செலுத்தவுள்ளார்.

தமிழ், தெலுங்கு என இரு மொழிகளில் உருவாகவுள்ள இந்தப் படத்தில் ரோபோ சங்கர், வில்லாக நடித்த டேவினோ தாமஸ் ஆகியோரு[ம்] நடிக்கவுள்ளனர்.

# விஜயகலா சிக்குவாரா... தப்புவாரா...?

– நோக்கன் –



மாணவி வித்தியா படுகொலை தீர்ப்பு வந்தும் அமைச்சர் விஜயகலாவின் ரென்ஷன் இன்னமும் குறையவில்லை. காரணம் நீதிபதி இளஞ்செழியனின் தீர்ப்பே காரணம்.

ட்ரயல் அட்பார் வழங்கிய தீர்ப்பு மக்கள் வரவேற்றாலும் - கொண்டாடினாலும், மக்கள் மத்தியில் சிறு குழப்பத்தை ஏற்படுத்தியிருக்கிறது குற்றவாளி ஒருவரின் கருத்து. ‘வித்தியா கொலை வழக்கில் எமக்கும் நியாயம் கிடைக்கவில்லை. வித்தியாவுக்கும் நீதி கிடைக்கவில்லை” என்று கூறியிருப்பதுதான். அத்துடன் ‘செயற்கைக்கோள் படங்களைப் பாருங்கள் என்றும் சவால் விட்டிருக்கிறார்” அக்குற்றவாளி.

இதுமட்டுமல்ல, இந்த வழக்கில் அமைச்சர் விஜயகலாவுக்கு நீதிபதி விடுத்த எச்சரிக்கையும் மக்கள் மனதில் பலவிதமான ஐயப்பாடுகளை - கருத்து பேதங்களையும் - ஊகங்களையும் ஏற்படுத்தியிருக்கின்றன. மக்கள் மத்தியில் அரசியல்வாதிகள் குறித்து எழும் இதுபோன்ற ஐயப்பாடுகள் பெரும் பாதிப்புக்களை ஏற்படுத்தி விடும். காரணம் அவர்கள் எதிர்கொள்ளவிருக்கும் அடுத்த தேர்தல்கள் விரைவில் வரவிருக்கின்றன என்பதுதான். இந்த ஐயப்பாடுகள், கருத்துபேதங்கள், ஊகங்கள் எல்லாமே மக்கள் மனதை நிரப்பியிருக்கும்போது அவர்கள் முன்சென்று வாக்குக் கேட்பது எப்படி? என்பதுதான். இவர்கள் வாக்குக் கேட்கச் சென்றால் செல்லாக்காசாகவே மக்கள் பார்ப்பர். இந்த நிலை ஏற்பட்டால் ‘வாய்க்கு வந்தபடி கேள்வி கேட்பானே? எதை எதையெல்லாம் கேட்டு நாறடிப்பானே. நாணிக் கோணித் தலையை கால் இடுக்கிற்குள் வைத்துக் கொண்டல்லவா திரும்பி வரவேணும். என்ன செய்வது...?” என்ற நிலைதான் இருக்கும். விஜயகலா அரசியல்வாதி என்பதற்கும் அப்பால் தற்போது - ஓர் அமைச்சர் - அதுவும் மகளிர் விவகார இராஜாங்க அமைச்சர். வித்தியா கொலை நடந்தபோது சிறுவர் விவகாரமும் இவரின் கீழேயே... பெண்ணான இவர், மாணவி வித்தியா கொலை செய்யப்பட்டு சடலம் கண்டுபிடிக்கப்பட்ட காலை நேரத்திலேயே அங்கு சென்றாலும் பரவாயில்லை. குற்றவாளிகள் என மக்கள் கண்டு கொண்டோர் கைதாகி தாக்கப்பட்ட சமயம், இரவு நடுநிசியைத் தொட்டுக் கொண்டிருந்த நேரம் அங்கு சென்றிருந்தார். மக்கள் குறையைக் கேட்கவோ - அல்லது அரசியல் இராஜதந்திர நகர்வுக்கோ செல்வது போல் இல்லாது - சந்தியில் நடக்கும் சண்டை ஒன்றை விலக்கிப் பிடிப்பவராகச் சென்றிருந்தார்.

சுமார் இரண்டரை ஆண்டுகள் இழுத்த மாணவி வித்தியா கொலை வழக்கு இப்போது தீர்ந்தாகி விட்டது. வன்கொடுமைகளில் ஈடுபடுவோருக்கு வித்தியா வழக்கு குற்றவாளிகளுக்கு வழங்கப்பட்ட தண்டனை நல்லதொரு பாடமாக அமைந்து விட்டது. அனைவரும் தராதரம் பாராது சட்டத்தின் நிறுத்தப்பட்டு தண்டிக்கப்படுவர் என்பதை நிலைநிறுத்தியிருக்கிறது. ஆனால் அது விட்டுச் சென்றவற்றில் சிக்கி முழி பிதுங்கி நிற்பவர் அமைச்சர் விஜயகலா. இந்த வழக்கில் அவர் சம்பந்தப்பட்டார் என்பது காணொலிகளுக்கு அப்பால், நீதிபதியின் எச்சரிக்கை வலு சேர்த்திருக்கிறது. இது மக்கள் மத்தியில் அவர் தொடர்பில் பலத்த கேள்வியை - சந்தேகத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

அதுமட்டுமின்றி ‘அனைவரும் தராதரம் பாராது சட்டத்தின் முன் நிறுத்தப்பட்ட தண்டிக்கப்பட வேண்டும்” என எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா. சம்பந்தன் கூறியிருப்பது யாரைப் பற்றியது என்பதையும் சீர் தூக்கிப் பார்க்க வேண்டிய நிலையுள்ளது. இதன் பிரதிபலிப்பே கடந்த வாரத்தில் யாழ்ப்பாணத்தின் பல பிரதேசங்களிலும் ஒட்டப்பட்ட சுவரொட்டிகள் சொல்கின்றன. ‘குற்றவாளிகளைத் தப்பிக்க உதவியவர்களும் குற்றவாளிகளே...! அவர்களுக்கும் தண்டனை வழங்கப்பட வேண்டும்” எனக் கோரி அமைச்சர் விஜயகலா, சட்டத்துறையை சேர்ந்த வி.ரி.தமிழ்மாறன் ஆகியோரின் புகைப்படங்களுடன் அச்சுவரொட்டிகள் முளைத்திருந்தன.

வழக்கு தினத்தில் நீதிமன்றில் வாசிக்கப்பட்ட நீதிபதி இளஞ்செழியனின் அறிக்கை தெளிவாக சில விடயங்கள் சொல்லப்பட்டுள்ளன. அதாவது அமைச்சர் மாணவி வித்தியா படுகொலை விவகாரத்தில் விஜயகலா செய்யத் தவறிய கடமைகள் பற்றி.

இன்றைய குற்றவாளிகள் வித்தியா கொலைக்கு மறுநாள் சந்தேகத்தின் அடிப்படையில் மக்களால் பிடிக்கப்பட்டு கட்டி வைக்கப்பட்ட நடுநிசியை அண்மித்த இரவில், விஜயகலா தனது பாதுகாப்புக் குறித்து சிறிதும் அச்சமின்றி அங்கு சென்று, மக்களைத் தாக்கவிடாது பொலிஸில் ஒப்படைத்த பின்னரே வீடு சென்றிருந்தார். சுவிஸ்குமார் மக்களால் கட்டி வைக்கப்பட்டு தாக்கப்பட்ட போது அவ்விடம் சென்ற அமைச்சர் விஜயகலா சுவிஸ்குமாரைப் பார்த்து ‘நீ சசியின் அண்ணனா..?” எனக் கேட்ட காணொலிகள் இன்னமும் இணையத்தில் உண்மைகளை சொல்லிக் கொண்டே இருக்கின்றன. ஆகவே சுவிஸ் குமாரின் சகோதரருடன் அல்லது அவரின் குடும்பத்தவரை அமைச்சர் விஜயகலா முன்னரே நன்கறிந்துள்ளார். ஆனால், சுவிஸ்குமாரை தனக்குத் தெரியாது. மனிதாபிமான அடிப்படையிலேயே அவரை விடுவித்தேன் என அவர் திருவாய் மலர்ந்திருப்பது அவர் எதையோ மறைப்பதை உணர்த்தி நிற்கிறது.

இதனிடையே கொழும்பை தளமாகக் கொண்டு இயங்கும் ஒரு ஊடகம் ‘புங்குடுதீவு மாணவியான வித்தியா படுகொலைசெய்யப்பட்ட வழக்கில் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரனின் செயற்பாடுகளில் சநதேகம் உள்ளது” என ஆதாரபூர்வமாகக் குற்றச்சாட்டுக்களை முன்வைத்து செய்தி ஒன்றை பிரசுரித்திருந்தது.

மாணவி வித்தியாவின் கொலை நடந்த ஒரு வாரத்தில் நாடாளுமன்றத்தில் அமைச்சர் விஜயகலா ஆற்றிய உரையில் ‘குற்றவாளிகளை கண்டறிந்து உடனடியாக அவர்களுக்கு மரண தண்டனை வழங்கப்பட வேண்டும்” எனப் பொங்கி ஆர்ப்பரித்திருந்தார். அவரின் அந்த உரையைப் பார்த்தவர்களுக்கு ஆச்சரியம் ஒன்று காத்திருக்கும். வித்தியாவுக்காக நாடாளுமன்றில் நீதி கேட்கும் சீன் கண்ணகி நீதி கேட்டதற்கு ஒப்பாக இருந்தது. சுவிஸ்குமாரை விடுவிக்க வரவில்லை என்று காட்டவும், புங்குடுதீவு மக்கள் மீது கொண்ட அன்பினாலேயே வித்யாவுக்கு நீதி தேடுபவராக வந்தார் என்று காட்டிக் கொள்ளவுமே அப்படி நாடாளுமன்றத்தில் கத்திக் குளறிக் கூத்தாடினரா? என்ற சந்தேகத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

அப்படி எனில் இந்த சுவரோட்டிகள் சொல்வதென்ன? தனது தீர்ப்பில் நீதிபதி இளஞ்செழியன் சொன்னதென்ன? நாடாளுமன்றில் இந்தப் படுகொலையைச் செய்த கயவர்களை உடனடியாகப் பிடித்துத் தூக்குத் தண்டனை வழங்க வேண்டும் என்று விஜயகலா கத்துகிறார். ஆனால் கொலை நடந்த அன்று கொலைக் குற்றவாளி என அடையாளங் காணப்பட்ட ஒரு குற்றவாளியைப் பொதுமக்கள் பிடித்துப் பொலிஸில் ஒப்படைத்து ஏன் காப்பாற்றினார்? முன்னுக்குப் பின் முரணான பேச்சுக்கள் எதற்கு- இவரின் நோக்கம்தான் என்ன? இப்படி மக்கள் கரிசனையுள்ள ஒருவர் எப்படி இந்த வலைக்குள் சிக்கினார்? இதையெல்லாம் விட்டுவிட்டு நீதாயம் இவரை விசாரிக்க வேண்டியதேன்? விசாரித்ததோடு மட்டுமல்லாமல் தமது தீர்ப்பின் முடிவில் விஜயகலாவின் செயற்பாடுகள் பற்றி விமர்சித்தது ஏன்? என்ற கேள்விகள் எழுகின்றன.

எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன் சொல்வது போன்று தராதரம் பாராது சட்டத்தின்முன் நிறுத்தப்பட்டுத் தண்டிக்க வேண்டுமெனில் மீண்டும் இந்த விவகாரம் கிளறப்பட வேண்டும். அப்படிக் கிளறினால் விஜயகலா சிக்குவாரா...? அப்படிக் கிளறுப்படமல் விஜயகலா தப்புவாரா? இதிலிருந்து தப்பினாலும் அடுத்த தேர்தலில் மக்களின் தீர்ப்பில் சிக்குவாரா...? தப்புவாரா...? என்பது அரசின் - நீதியின் - காலத்தின் கைகளிலேயே உள்ளது.

# கடந்தவார சமூக இணையத் தரவரிசை

1




## களை கட்டிய விஜயதசமி

நவராத்திரி விரத நாளின் இறுதி வாரமாகக் கடந்த வாரம் அமைந்தது. வீடுகள், பாடசாலை, அலுவலகங்கள், தனியார் கல்வி நிலையங்கள், ஆலயங்கள் என விஜயதசமி விழாக் கொண்டாட்டத்தை பகிர்ந்து கொண்டார்கள் நம்மவர்கள்.

முத்தேவியரின் அருள் கிட்டவும் வாழ்த்துக்களைத் தங்கள் பக்கங்களில் தெரிவித்துக் கொண்டார்கள். குறித்த பகுதியினர் தமது இல்லங்களில் கொலு வைக்கப்பட்ட படங்களையும் தங்கள் பக்கங்களில் போட்டுக் கொண்டனர். விஜயதசமிக் கொண்டாட்டத்திலும் சுய (செல்பி) படங்களே அதிகளவில் பகிரப்பட்டன.

2




## சுவரொட்டி பரபரப்பு

வித்தியா கொலைக் குற்றவாளியை தப்ப வைக்க முயன்ற அமைச்சர் விஜயகலா, சட்டத்தரணி தமிழ்மாறன் ஆகியோர் கைது செய்யப்பட வேண்டும் என தீவக மக்கள், பெண்கள் அமைப்பக்களின் பெயரில் மர்மமாக முளைத்த சுவரொட்டி பற்றியே அதிகளவில் செய்தி பரிமாறிக் கொண்டார்கள் பதிவர்கள்.

பெரும்பாலான பதிவர்கள் இந்த சுவரொட்டியின் விடயத்துக்கு ஆதரவு அளிப்பதான கருத்துக்களை அதிகம் பகிர்ந்து கொண்டனர்.

எனினும் ஹர்த்தாலுக்கு ஆதரவு தெரிவிப்பதில் பலரும் இரு மனநிலைகளிலான கருத்துக்களை பதிந்தனர். மேலும் ஹர்த்தால் அறிவிப்பு உத்தியோகபூர்வமற்றது என்ற தகவலையும் பலரும் செய்திகளாக தங்கள் பக்ககங்களில் பதிவிட்டிருந்தனர்.

3




## சிறுவர் தினம்


கடந்த முதலாம் திகதி சர்வதேச சிறுவர் தினம். இது குறித்துப் பலரும் தங்கள் முகப்புத்தகத்தில் பதிவுகளை இட்டிருந்தனர். அவற்றில் பெரும்பாலானவை இலங்கை இராணுவத்தால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் பற்றி அதிகம் பேசப்பட்டன. சிறுவர் தினம் குறித்து நடந்த சிறப்பு நிகழ்வுகள், மற்றும் சிறுவர் கௌரவிப்புக்கள் குறித்தும் பலரும் தங்கள் முகப்புத்தகங்கள் தகவல்கள் சிறுவர்களின் - தங்கள் பிள்ளைகளின் படங்களை பக்கங்களில் நிறைத்திருந்தனர்.















# புதுவிதி
PUTHU VITHI

தொடர்புக்கு:
ஆசிரிய பீடம் : 021 493 7777
விநியோகம் : 021 492 7470
விளம்பரம் : 021 492 7466

107, இராசவீதி,
கோப்பாய் - திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
puthuvithi@gmail.com


## புல்லுக்கு இறைத்த நீர்

ஈராக்கில் இருந்து குர்திஷ்தானும், ஸ்பெயினில் இருந்து கட்டலோனியாவும் தனிநாடுகளாக பிரிந்து செல்வதற்கான வாக்கெடுப்புக்களை நடத்தியுள்ளன. பெரும் ஆர்வத்துடன் இரு தேசங்களின் மக்களும் தமது வாக்குகளைப் பதிவிட்டனர். 90 சதவீதத்துக்கும் அதிகமானவர்கள் பிரிந்து செல்வதற்கு ஆதரவாகவே வாக்களித்திருந்தனர். இரு வாரங்களுக்குள் நடந்த தனிநாட்டுக்கான வாக்குப் பதிவுகள் ஈழத் தமிழர்கள் - குறிப்பாக இன்றைய இளைஞர்களிடம் பெரும் ஆர்வத்தை ஏற்படுத்தியுள்ளன. தமக்கும் அவ்வாறான சந்தர்ப்பம் ஒன்று ஏற்பட்டு விடாதா என்ற ஏக்கமே ஈழத் தமிழர்களின் இந்த ஆர்வத்துக்குக் காரணம்.

இந்த ஏக்கத்தை கண்டுதானோ என்னமோ தங்கள் முகப்புத்தகத்தில் (Facebook) 'தமிழீழத்துக்கான வாக்கெடுப்பு" என்ற செயலியை ஆரம்பிப்பதற்கு வழிகோலியிருப்பது. புலனாய்வளர்களால் - சைபர் பிரிவால் கண்காணிக்கப்படுகிறோம் என்று அறிந்தும் - தெரிந்தும் பெரும்பாலான இளைஞர்கள் தங்கள் முகப்புப் படத்தை (Profile Picture) மாற்றி வருகிறார்கள். சமூகவலைத்தளங்கள் ஆளும் இன்றைய உலகில் இதுவும் ஒரு வகையான போராட்டம்தான். சமூகவலைத்தளத்தில்– முகப்புத்தகத்தில் முன்னெடுக்கும் போராட்டத்தை உலகம் அறியாததல்ல. துனீசியப் புரட்சிக்கு வித்திட்டது முகப்புத்தகமே என்பதை அரசும் - இன்றைய தலைமுறையினரும் அறியாத விடயமல்ல.

முகப்புத்தகத்தில் தமிழீழ வாக்கெடுப்பு கோரிக்கை இப்போது வலுப்பெற்றிருக்கும் நிலையில் புதிய அரசமைப்புக் குறித்தும் பரவலான கருத்துக்கள் - பேச்சுக்கள் உள்ளன. புதிய அரசமைப்பின் இடைக்கால அறிக்கையில் தமிழரின் பிரச்சினைக்கு தீர்வு இல்லை என்பதை அனைவரும் நன்கறிவர். இந்த நிலையில் தமிழ் மக்களின் ஏகோபித்த ஆதரவைப் பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 'இருக்கிறது" என்றும் வடக்குத் தமிழர்களின் பேராதரவைப் பெற்றவரும் முன்னாள் நீதியரசருமான சி.வி.விக்னேஸ்வரன் 'இல்லை" என்றும் 'இருக்கு - இல்லை" என்று அக்கப்போர் புரிந்து கொண்டிருக்கிறார்கள். தவிர இடைக்கால அறிக்கையில் தமிழருக்கு சாதகமாக என்ன இருக்கிறது? என்ன இல்லை? என்று தெளிவுபடுத்த இரு சாரரும் மறந்துவிட்டார்கள் என்பதை விட, முன்வரவில்லை என்பதே பொருத்தமாக இருக்கும்.

இளைஞர்கள் தொடங்கியிருக்கும் முகப்புத்தகப் போராட்டம் எப்படி அமையப் போகிறது? வழமையான முகப்புத்தகப் போராளிகளின் போராட்டம் போன்று மெல்லத் தணிந்து அணைந்து விடுமா? அல்லது வழமை போன்று இல்லாமல் தடைகளை உடைத்து நிஜத்திலும் போராட்டம் வெடிக்குமா? என்பதற்கப்பால், இவர்களின் போராட்டம் அர்த்தமானதா? என்பதையும் ஒருமுறை நோக்கிவிடுவது சாலச்சிறந்தது. அதற்கு முன்னர் குர்திஷ்தான், கட்டலோனியா தேசங்கள் எப்படி வாக்கெடுப்பை நடத்தின என்பது குறித்த வரலாறை ஒருமுறை தமிழர்கள் தங்களின் பாடமாகக் கற்றுவிடுவது நல்லது. அதுதான் அவர்களுக்கான சிறந்த வழிகாட்டுதலாகவும் அமையும். குர்திஷ்தான், கட்டலோனியா தேசங்கள் ஈராக், ஸ்பெயின் நாடுகளில் தன்னாட்சி அதாவது போராட்டகாலத்தில் இருந்து வலியுறுத்தி வரும் சுயாட்சி அதிகாரத்தைக் கொண்டிருந்த நாடுகள் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். இதன் அடிப்படையிலேயே அவை சுயமாகத் தமக்கான வாக்கெடுப்பை நடத்தி தனிநாடாக மாறுவதற்கான முடிவை அறிவித்தன.

ஆனால் இங்கோ நிலைமை அப்படியல்ல. புதிய அரசமைப்பின் இடைக்கால அறிக்கையிலேயே 'என்றும் பிரிக்கப்பட முடியாத ஒரே நாடு - ஏகயரட்ட" எனக் குறிப்பிடப்பட்டுவிட்டது. இதற்கு எதிராக எமது அரசியல்வாதிகளும் சரி - மக்களாகிய நாமும் சரி போராட்டம் எதிலும் ஈடுபடவில்லை. அப்படியே நடத்தினாலும் அதை வெற்றிகரமாக நடத்தும் திறமையற்றவர்களாகவே நாம் இருக்கிறோம். இப்படியான நிலையில் முகப்புத்தகப் போராட்டம் அர்த்தமற்றதாகி விடுமா? என்ற கேள்வி எழுவது நியாயம். எனவே இளைஞர்களின் - மக்களின் போராட்டம் முதலில் சுயாட்சியை வலியுறுத்துவதாக இருக்க வேண்டும். இதற்கு முன்னர் எம் அரசியல்வாதிகள் இந்த விடயத்தில் ஒன்றாக வேண்டும். அதன் பின்னரே எமது கோரிக்கைகள் வலுப்பெறும் அதுவரை எமது போராட்டங்கள் புல்லுக்கு இறைத்த நீராகிவிடும் என்பதே உண்மை.

'யாதும் ஊரே! யாவரும் கேளிர்!!'

## எண்ணங்களே வாழ்வின் வண்ணங்கள்

எண்ணங்களே வாழ்க்கையாகின்றது. நல்ல எண்ணங்களும் நேர்ச்சிந்தனைகளும் சிறப்பான வாழ்க்கை முறைக்கு வழிகாட்டுகின்றன என்பதே நிஜமானதாகும். நல்ல சிந்தனைகளை உருவாக்குவதென்பது மிகக்கடினமானதாகும்.இன்றைய காலத்தில் கெட்ட சிந்தனைகள் அதிகமாக எம்மைச் சுற்றியுள்ளதால் அதிகமான மனங்கள் அதற்குள் விழுந்துவிடுவதும் சாத்தியமாகிறது. நல்ல எண்ணங்களை வளர்ப்பதென்பது கடினமான காரியமே எனினும் அதனால் உண்டாகின்ற பாராட்ட முனைவதில்லை. பாராட்டு என்பதும் வாழ்த்து என்பதும் எமக்கு மிகப்பெரிய ஊக்கசக்தியாக இருப்பவை. மற்றவர்களை மனந்திறந்து பாராட்டுங்கள். அவர்களின் சாதனைகள் மேலும் வளரும்.

கணவன் மனைவியாக இருக்கட்டும் நண்பர்களாக இருக்கட்டும் உறவுகளாக இருக்கட்டும் யாராக இருப்பினும் புரிந்துகொண்ட விதம் சரியாக இருப்பின் பிரிவுகள் சாத்தியமில்லை. அதாவது கோபமே சண்டைக்கான பிரதான காரணியாகும். கோபம் என்ற உணர்வு



மனஅமைதியும் மகிழ்ச்சியும் எத்தனை விலை கொடுத்தாலும் வாங்கமுடியாதது.

அச்சம், கோபம், போன்ற எதிர்வினை எண்ணங்கள் எல்லாம் முந்திக் கொண்டு வருகின்றன. அமைதி, மகிழ்ச்சி, நம்பிக்கை, போன்ற நேர்ச்சிந்தனை எண்ணங்கள் அவ்வளவு இயல்பாக வருவதில்லை. அதற்கு நிறைய முயற்சியும் பயிற்சியும் தேவைப்படுகின்றன. மற்றவர்களைப் பாராட்டுவதும் அன்புகாட்டுவதும் நல்ல சிந்தனைகளே ஆகும். பரீட்சையில் 90 புள்ளிகள் பெற்ற பிள்ளையை பாராட்டும் உணர்வைக்காட்டிலும் ஏன் பத்துப் புள்ளியை இழந்தாய் எனக்கேட்கும் பெற்றோரே எம்மத்தியில் அதிகமாக உள்ளோம். இது தான் எதிர்ச்சிந்தனை ஆகும். அதே பிள்ளையை கெட்டிக்காரன் என்றோ கெட்டிக்காரி என்றோ தட்டிக் கொடுத்தோமானால் அந்தப்பிள்ளை இன்னும் அதிக சாதனைகளைப் புரிய அதுவே வழிகோலும்.

யாராவது எம்மைப்பற்றி புறம் கூறுகின்றார்கள் என அறிந்தால் ஆத்திரப்பட்டு கோபப்பட்டு நாமும் வார்த்தைகளை விடுவதைக் காட்டிலும் மௌனமாக இருந்து அவர்களின் எண்ணங்களை பொய்ப்பிக்கலாம். எம்மீது ஒருவர் கோபப்படுகின்றார் என்றால் அதன் காரணத்தினை அவரது நிலையில் இருந்து நோக்கவேண்டும். அப்போது தான் சரிபிழை புரியும். யாராவது அதிசயமான ஒன்றை செய்துவிட்டதாய் அறிந்ததும் எப்படிச் செய்தான் என யோசிக்கின்றோமே தவிர அவனது சாதனையை உடனடியாக இலகுவாக எம்மை ஆக்கிரமித்து விடுகின்றது. கோபத்தை எந்த அளவிற்கு குறைக்கின்றோமோ அந்த அளவிற்கு எமது ஆரோக்கியம் வலுவடையும் என்கிறது விஞ்ஞானம். வாழ்க்கை அழகானது என்பதையும் எமது வாழ்க்கையை சீரமைக்கின்ற பொறுப்பும் கடமையும் எம்மிடமே உள்ளது என்பதையும் புரிந்துகொண்டோமானால் வாழ்க்கையை வெறுப்பதற்கு எதுவுமில்லை.

வாழ்க்கையை பற்றி தீர்மானமான விளக்கம் எதுவும் இல்லாவிட்டாலும், வாழ்க்கையின் பிரச்சினைகளுக்கு மனோபலம் ஒன்று மட்டுமே தீர்வாக அமைகிறது. ஒவ்வொருவரின் வாழ்க்கை அனுப வங்களே அவர்களின் வழிகாட்டி. அனுபவங் களிலிருந்து அவர்கள் கற்றுக் கொள்ள வேண் டும். அப்படி கற்றுக் கொண்டவன் ஜெயிக் கிறான். கற்றுக் கொள்ளாதவன் தவிக்கிறான்.

வாழ்க்கையில் சிக்கல்கள் இல்லை. அதை நாம் பார்க்கும் கண்ணோட்டத்தில்தான் சிக்கல்கள் உள்ளன. நம் வாழ்க்கையில் நடப்பவை நம்மை துன்புறுத்துவதில்லை. அதைப் பற்றி நாம் எண்ணும் எண்ணங்கள்தான் நம்மை துன்புறுத்துகின்றன. நல்லவற்றை நினைத்து நல்லவற்றை செயற்படுத்துவோம். நம்மால் நம் எண்ணங்களையும் உணர்வுகளையும் மாற்ற முடியும். மூளையும் மனமும் ஒன்றாகும் போதே சாதனைகள் பிறக்கின்றது. அமைதி நிலைக்கிறது.

இதுதான் உலகின் அத்தனை மதங்களும் ஒரே குரலில் சொல்லும் மந்திரம்!

# தம்புவின் கள்



- சிக்மலிங்கம் றெஜினோல்ட் -

"தாடித் தம்புவின் கள்ளில் அப்படி என்னதான் தனியான ருசியிருக்கும்?" அதை எப்படியாவது அறிய வேணும் என்று அண்ணாவுக்கும் எனக்கும் ஆர்வம். ஆனால், எப்படி அறிவது? தம்பு சீவும் பனையில் ஏறிக் குடிக்கலாம். ஆனால், அது ரொம்பச் சிரமமான காரியம். பழக்கமில்லாமல் ஏறி ஏதாவது ஏடாகூடமாக நடந்துவிட்டால்..! அப்படியென்றால், தம்பு சீவலுக்கு வரும்போதுதான் கள்ளை எடுக்க வேணும். ஒரு பனையின் சீவல் முடிந்து, அடுத்த பனையில் ஏறுவதற்கு முன், முதல் சீவிய பனையின் கள்ளை மர நிழலின் கீழே வைப்பார் தம்பு. அந்த நேரம் பார்த்து எடுக்க வேணும். ஆனால், அது அவருடைய கண் பார்வைக்குப் படக்கூடியமாதிரியே இருக்கும். ஆகவே அதுவும் கொஞ்சம் கஷ்ரமே. ஒரு வாய்ப்பிருந்தது. சில நாட்களில் தம்பு இரவிலேயே பனையேறுவார்.

இரவென்றால் ஒன்பது அல்லது பத்து மணிக்கு மேலிருக்கும். இப்போது இரவு ஏழு மணிக்குப் பிறகு கள்ளுத் தவறணையே திறந்திருக்க முடியாது. மூடி விட வேணும். ஆனால், தம்புவோ இரவு ஒன்பதுக்கு மேல்தான் மாலைச் சீவலையே ஆரம்பிப்பார். பனையிலிருந்து கொண்டு "காளி, மகமாயி, அடி மூதேவி, வேசை, தாயோழி, எங்கயடி போட்டாய்... வாடி வந்து என்னைப் பாரடி... இந்தத் தம்பனைப் பாரடி.... வாடி வந்து இந்தக் கள்ளைக் குடியடி....உனக்குத் தானடி இந்தப் பெரிய மடை" என்று பெரிய சத்தமாகப் பேசிக்கொண்டு தொழில் செய்வார். சோளகக் காற்றில் ஊஞ்சலாடும் உயரப்பனைகளில் கூட இரவில் ரோச் லைற்றோடு ஏறும் தம்பப்பாவை எவர்தான் மறப்பர். தம்புவிற்காக ஒன்பது மணிக்குப் பிறகும் கூட அந்தக் கள்ளைக் குடிப்பதற்கு எங்களூரில் ஆட்களிருந்தார்கள்.

வேண்டுமானால், அந்த நேரம் பார்த்து அந்தக் கள்ளை நாங்கள் எடுக்க முடியும். ஆனால், அது வீட்டிலிருந்து நாங்கள் வெளியே கிளம்பிப் போக முடியாத நேரம். எங்களைப் படிக்க வைத்து விட்டு ஐயா முற்றத்தில் காற்று வாங்கிக் கொண்டிருப்பார். அல்லது மாடுகளுக்கு பனையோலை கிழித்துப் போட்டுக் கொண்டிருப்பார். அந்த நேரம் பார்த்து நாங்கள் இருவருமாக வீட்டுக்கு வெளியே கிளம்பிப்போவதென்றால் காரணம் சொல்ல வேணும். அது சாதாரணமான காரணமாக இருக்க முடியாது. நியாயமான காரணமாக இருக்க வேணும். இப்படியொரு இறுக்கமான நிலைமை இருக்கும்போது கள்ளைக் களவாக எடுத்துக் கொண்டு எப்படித் திரும்புவது? அப்படித்தான் கள்ளை எடுத்தாலும் அதை எப்படி ஆறுதலாக ருசித்துக் குடிப்பது? அப்படிக் கள்ளைக் குடித்து விட்டு வீட்டுக்கு எப்படி வருவது? அப்படி வந்தாலும் அதை வெளியே காட்டிக் கொள்ளாமல் எப்படி மறைத்துக் கொண்டிருப்பது? கள்ளு வாடை குடிக்கென்று அடிக்கும். மாமாவின் நண்பர் ஒருவர் கள்ளுக்குடிப்பார். கள்ளுக்குடித்து விட்டு அவர் வரும்போதே மணம் அதைக் காட்டிக் கொடுத்து விடும். ஏவறை விட்டால் சொல்லவே வேண்டாம். புளிச்சல் கள்ளின் மணம் வளவையே நிறைக்கும். வீதியில் என்றால் மணமே ஊர்வலம் போகும். இதைவிட கள்ளை இதற்கு முன் குடித்துப் பழக்கமில்லாதவர்கள் நாங்களிருவரும். பழக்கமில்லாதவர்கள் குடித்தால் நிச்சயமாக வாந்தி வரும் என்று சிவச்செல்வம் சொல்லியிருந்தான். அவனுக்கு இப்போதும் கூட வாந்தி வரும். அரைப்போத்தல் அடித்தாலே போதும். வயிறும் வாயும் குழம்பி விடும். ஆகவே இரவில் இந்தக் காரியம் சாத்திமே இல்லை. ஏதாவது ஒரு பகலில்தான் கை வைக்க வேணும் என்று காத்திருந்தோம். தம்புவின் கள்ளுக்காக பல பத்து மைலுக்கு அப்பாலிருந்தெல்லாம் ஆட்கள் வருவார்கள். வெளியூர் லொறிக்காரர் கூட தம்பு வீட்டுக்கு முன்னே வண்டியை நிறுத்தி விட்டுக் கள்ளடிப்பார்கள். எங்கள் வீட்டிற்கு வருகின்ற மாமாவின் கூட்டாளிகளுக்குத் தம்புவின் கள்ளையே வாங்கிக் கொடுப்பார் மாமா. தம்புவின் கள்ளு விசேசமானது என்பதே பொதுவான அபிப்பிராயம். தம்புவிடம் குடித்தவர்கள் யாரும் கள்ளைப் பற்றிக் குறை சொன்னதில்லை. பாராட்டிவிட்டே போவார்கள்.



சிலவேளை அவர்கள் வரும்போதே தம்புவுக்கு ஏதாவது அன்பளிப்புப் பொருட்களைக் கொண்டு வந்து கொடுப்பதுமுண்டு. கள்ளுக்குத் தனியாக வேறு காசு கொடுப்பார்கள். அன்பளிப்புத் தனியானது. அதற்குக் கணக்குக் கிடையாது. அது கள்ளின் சிறப்புக்குரிய பரிசு. இதை நானே நேரில் பார்த்திருக்கிறேன்.

தம்புவுக்குப் பிள்ளைகள் கிடையாது. அவரும் மனைவியும் மட்டுமே. மனைவி பசுபதி தக்காளிப் பழத்தையும் விடச் சிவப்பாக மினுங்கிக்கொண்டிருப்பார். எலுமிச்சம் பழக் கன்னங்கள். "செகப்பழகி" என்று இப்பொழுது சொல்கிறார்களே, அப்படியொரு அழகி. ஆனால், எந்த அலங்காரப் பூச்சும் பூசாமலே விளைந்த அழகு அது. சிலவேளை பம்பல் கூடி, தம்பு உஷாராகிட்டார் என்றால், பசுபதியைப் பற்றிப் பெருமையாகச் சொல்வார். "மயிலுக்கு ஆரும் அலங்காரம் பண்ணிறதோ! வான வில்லுக்கு ஆரேனும் வர்ணம் பூசிறதோ! பூக்களுக்கு ஆரும் நிறந்தீட்டிறதோ! வானத்தை ஆரும் துடைச்சுக் கழுவிறதோ! அதெல்லாம் இயற்கை அழகு. அப்பிடித்தான் என்ர கிளியும்... அவள் இயற்கை அழகியல்லோ... ஊரில உள்ள பொம்பிளையள் தங்கள வடிவாக்கிறதுக்குப் படுகிற பாடெல்லாம் எனக்கெல்லோ தெரியும். என்னவெல்லாமோ பூசி மினுக்குகினம். ஆனால், காலைப் பூச்சு மாலைக்கு நிக்காது. மாலைப் பூச்சு இரவுக்குத் தாங்காது....!" என்பார்.

பசுபதி பிள்ளைகளைப் பெறவில்லையே தவிர, ஆயிரம் பிள்ளைகளுக்கு மேல் பேறு பார்த்த மருத்துவிச்சி. நான் பிறக்கும்போது கூட பசுபதிதான் பேறு பார்த்ததாகச் சொன்னார்கள். ஊரில் உள்ள அத்தனை பேருடைய பேறுகளையும் பார்த்த பேறுடைத்தாய். பிறக்கும் குழந்தையை முதல் முகம் பார்ப்பது என்பது சாதாரணமானதா? அது பெருங் கொடையல்லவா? அப்படிப் பார்த்தால் பசுபதிக்கு எங்களூரில் ஆயிரத்துக்கு மேல் பிள்ளைகள். பசுபதியைப் பேர் சொல்லி அழைத்தாலும் அதிலே ஒரு மரியாதை இருந்தது.

தம்புவின் தாடியிலும் தலையிலும் ஒரு கறுப்பு மயிரைக் காணமுடியாது. அத்தனையும் நரையேறி வெளுத்து விட்டன. அழகான பெரிய தாடி. பிச்சமூர்த்தி தாடி வைத்திருந்தாரே அதைப்போல. பிச்சமூர்த்திக்கு நீளமான ஒரல் முகம். தம்புவுக்கு வட்டமான, கொழுத்த முகம். உயரமும் அப்படித்தான். ஐந்தடி இரண்டு அல்லது மூன்று அங்குலம் இருக்கலாம். அகத்தியர் படத்தில் சீர்காழி கோவிந்தராஜனைப் பார்த்தவர்கள் அதிலே தம்புவை அடையாளம் காணலாம். அச்சு அசல், அதே தோற்றம். ஆனால், கோவிந்தராஜனைப் போலல்ல, தம்புவுக்குக் கட்டுமஸ்தான உடல். நாற்பது வருசத்துக்கு மேலாகப் மரமேறி ஏறிப் பலமேறிய உடல். கால்களிலும் தோள் மூட்டிலும் தசை திரண்டு மினுங்கும். சைக்கிளோட்டத் தெரியாது. நடைதான். சீவிய கள்ளைத் தூக்கிக் கொண்டு நடந்தே வருவார். முட்டி அல்லது சுரைக்குடுவையில் நிரம்பியிருக்கும் கள்ளோடு தம்பு நடந்து வருவதைப் பார்த்துக் கொண்டிருக்கலாம். அழகன்தான்.

தம்புவிடம் கள்ளுக் குடிக்க வருகின்றவர்கள் பின் வளவில் உள்ள பெரிய கொக்கட்டி மரத்தின் கீழே கூடுவார்கள். பெருங்கூட்டமெல்லாம் இல்லை. அதிகபட்சம் மூன்று நான்கு பேருக்குள்தான். பெருங்கூட்டத்தைத் தம்பு ஒரு போதுமே

( 18 ஆம் பக்கம் பார்க்க)

புதுவிதி PUTHU VITHI



இன்
பரிசு மழையில்
நனையத் தயாராகுங்கள்
ரூ 200,000/= இற்கும்
அதிகமான பணப் பரிசை
வெல்வதற்கான
அரிய சந்தர்ப்பம்
மேலதிக விவரங்களை அறிய: [redacted]
இன்றே புதுவிதி PUTHU VITHI வார இதழை
வாங்கிப் படியுங்கள்

# குட்டீஸ் பரிசுப் பொதி வெற்றியாளர்கள் விவரம்

**போட்டி 01**

01. நா.அபிகா,
கைதடி

02. வா.அத்விகா,
துன்னாலை மத்தி.
கரவெட்டி.

03. ஜெ.புருசோத்,
வசந்தபுரம், இளவாலை.

**போட்டி 02**

01. த.மதுரன்,
வட்டுக்கோட்டை கிழக்கு,
சித்தன்கேணி.

02. த.யதுஷன்,
இல.54, ஒட்டறுத்தகுளம்,
வவுனிக்குளம்.

03. சி.பாவரசன்,
யாழ். ஆராலி முரகமூர்த்தி
வித்தியாசாலை

**போட்டி 03**

01. நவரட்ணம் திலகா,
இல.363, பாரதிபுரம் மத்தி,
கிளிநொச்சி.

02. கு.அபிஷன்,
வடலியடைப்பு,
பண்டத்தரிப்பு.

03. தி.தனுஜன்,
கிளி. கனகபுரம் ம.வி.

**போட்டி 04**

01. சந்திரகுமார் தனுஷ்கர்,
புத்தளம் முந்தல் மகா வித்தியாலயம்.

02. சி.பாவரசன்,
யாழ். அராலி முருகமூர்த்தி
வித்தியாசாலை.

03. யோ.தர்சினி
யாழ். மட்டுவில் கமலாசினி
வித்தியாலயம்.

**போட்டி 05**

01. க.கிருத்திகா,
அளம்பில்,
முல்லைத்தீவு.

02. சந்திரகுமார் தனுஷ்கர்,
புத்தளம் முந்தல் மகா வித்தியாலயம்.

03. பாலரட்ணம் கபில்ரமணன்,
இணுவில்.

**போட்டி 06**

எவரும் சரியான விடை
அனுப்பவில்லை.

**போட்டி 07**

01. பா.யதுஷா,
யாழ். வடமராட்சி மத்திய மகளிர்
கல்லூரி.

02. யோ.சுபாஜினி,
மட்டுவில் கமலாசினி வித்தியாலயம்.

**போட்டி 08**

01. கு.ஆதிகேசவன்,
ஹாட்லிக் கல்லூரி,
பருத்தித்துறை.

02. ம.அபிஷாந்த்,
சுழிபுரம் திருவடிநிலை சைவ தமிழ்
கலவன் பாடசாலை

**போட்டி 09**

01. ஸ்ரீபிரபுசங்கர்,
கொழும்பு இந்துக் கல்லூரி.

02. பா.யதுஷா,
யாழ். வடமராட்சி மத்திய
மகளிர் கல்லூரி.

**போட்டி 10**

01. கனிஷ்ரா,
யாழ். வடமராட்சி இந்து மகளிர்
கல்லூரி.

02. ஜெகதாஸ் கிரிசாந்த்,
யாழ். தேவரையாளி இந்துக் கல்லூரி

**போட்டி 11**

01. கனிஷ்ரா,
யாழ். வடமராட்சி இந்து மகளிர்
கல்லூரி.

02. ஜெகதாஸ் கிரிசாந்த்,
யாழ். தேவரையாளி இந்துக் கல்லூரி

**போட்டி 12**

01. கிருஷாந்த்,
முல். யோகபுரம் மகா வித்தியாலயம்.

**புதுவிதி வார இதழ் நடத்திய குட்டீஸ் பரிசுப்பொதி போட்டியின் வெற்றியாளர்களின் விவரம் இங்கு வெளியாகின்றது. வெற்றியாளர்களுக்கான பரிசுகள் விரைவில் வழங்கப்படும். எனவே வெற்றியாளர்கள் 021 493 7777 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொண்டு தங்கள் விவரங்களை உறுதிப்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம்.**

02. பி.பிருத்திகா,
யாழ். பொஸ்கோ பாடசாலை

**போட்டி 13**

01. பா.யதுஷா,
யாழ். வடமராட்சி மத்திய மகளிர்
கல்லூரி.

**போட்டி 14**

01. ஸ்ரீஸ்கந்தராஜா லக்ஷன்
யாழ். மத்திய கல்லூரி

**போட்டி 15**

01. ஆனந்தராஜா பிரியதர்சன்,
கொழும்பு இந்துக் கல்லூரி,

**போட்டி 16**

எவரும் சரியான விடை
அனுப்பவில்லை.

( மிகுதி அடுத்த வாரம்)

# மாணவி வித்தியாவுக்கு கிடைத்த நீதி சகல பெண்களுக்கும் கிடைக்க வேண்டும்

பேராசிரியர் இ. விக்னேஸ்வரன்,
துணைவேந்தர்,
யாழ். பல்கலைக்கழகம்.

## யாழ். பல்கலைக்கழக துணைவேந்தருக்கு பகிரங்கக் கடிதம்...

வணக்கம்


யாழ்ப்பாணத்துக் கிராமியச் சூழல் ஒன்றில் இருந்து படித்துப் பட்டம் பெற்றுப் பல போராட்டங்களின் பின்னர், பல்வேறு விதமான எதிர்ப்புகளுக்கு மத்தியில் துணைவேந்தர் என்ற உயரிய பதவியை வந்தடைந்தவர் நீங்கள். எமது மக்களின் - பண்பாட்டின் - கல்வியின் சிகரமாகத் திகழும் யாழ். பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பதவியில் இருக்கும் தாங்கள்,எமது மக்களின் குரலாக ஒலிக்கும் இந்தக் கடிதத்தை வாசித்து பொறுப்பு உணர்ந்து செயற்படுவீர்கள் என்ற நம்பிக்கையுடனேயே இந்தக் கடிதத்தை எழுதுகிறேன். நீங்கள் மனச்சாட்சி மிக்க மனிதர் என்பதையும் நான் அறிவேன். எனவே எனது - எம் மக்களின் ஆதங்கத்தைப் புரிந்து கொள்வீர்கள் என்றும் நம்புகிறேன். அப்படிப் புரியாத விடயத்தை இதன் மூலமாகவேனும் அறிந்து கொள்ள வேண்டும் என்பதே எனது அவா...

கடந்த காலத்தில் - அதாவது தங்களுக்கு முன்னதாக துணைவேந்தர் பதவியில் இருந்த - இருத்தப்பட்ட அம்மையாரின் காலம் யாழ்.பல்கலைக்கழகத்தின் இருண்ட காலம் என்ற சிறப்புப் பெயரால் குறிப்பிட்டால் தவிர்க்க முடியாது. இதை கேலியாகக் கூறவில்லை - மனவருந்தத்துடனேயே பதிவிடுகிறேன். எனவே தங்களுக்கு தற்போது கிடைத்திருக்கும் இவ்வரிய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தாங்கள் படித்த கல்வி நிறுவனத்துக்கும், தாங்கள் படிப்பித்த கல்வி நிறுவனத்திற்கும், ஒட்டுமொத்தத் தமிழ் சமூகத்திற்கும் ஒரு மாற்றத்தையும், சுபீட்சத்தையும் தரமுடியும் என்று நான் நம்புகிறேன். அத்துடன் எத்தனையோ கஷ்டங்களுக்கு மத்தியில் தமது, எதிர்கால சுபீட்சத்தை அடிப்படையாகக் கொண்டும், கனவுகளை அடி மனதில் சுமந்து கொண்டும் பல்கலைக்கழகத்தை நோக்கி வருகின்ற ஏழாயிரத்து 615 மாணவர்களின் தலைவிதியை நிர்ணயிக்கின்ற பொறுப்பு தங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவே நான் கருதுகிறேன்.

ஒரு கிராமத்தில் பிறந்து, வளர்ந்து, கல்விகற்று - பேராசிரியராகி - கிராமத்தினதும் - தமிழ் மக்களினதும் பண்பாடு - கலாசாரத்தை நன்குணர்ந்த - அறிந்த மக்களின் கல்விப் பிரதிநிதியாக உள்ளவர் என்ற வகையிலும், ஒரு குடும்பத்தை வழி நடத்திச் செல்லும் குடும்பத் தலைவன் என்ற வகையிலும், பள்ளிப் பருவத்தில் இருக்கின்ற குழந்தைகளின் தந்தை என்ற வகையிலும் இதை நன்கு அறிவீர்கள் என்றும் எண்ணுகிறேன். எனவே சமூக செயற்பாடு என்ற வகையில் யாழ். பல்கலைகழகச் செயற்பாடுகளில் அனைவருக்கும் அளப்பரிய பொறுப்பிருப்பதாகவே நான் எண்ணுகிறேன். அது கற்பித்தலில் உள்ளவர்களானாலும் சரி, கல்விசாரா ஊழியர்களானாலும் சரி, மாணவர்களானாலும் சரி பல்கலைக்கழகத்தோடு சம்பந்தப்பட்ட அனைவருக்கும் இது பொருந்தும்.

கடந்த காலங்களில் சில பேராசிரியர்களின்மீதும் விரிவுரையாளர்களின்மீதும் கூட பல குற்றங்கள் சாட்டப்பட்டன. அவற்றுள் சில விசாரணை செய்யப்பட்டன. சில விசாரணை செய்யப்படாதவையும் உண்டு. விசாரணை செய்து தண்டிக்கப்படாத சம்பவங்களும் - இடையில் நின்ற சம்பவங்களும் உள்ளன. அதற்கு பல்கலைக்கழகத்தின் நற்பெயருக்குக் களங்கம் ஏற்பட்டுவிடும் என்று காரணங்கள் கற்பிக்கப்பட்டவையே அதிகம். அவை எல்லாம் கடந்த காலங்கள் என்ற போதிலும் தாங்கள் பதவியேற்ற சில வாரங்களிலேயே நடந்த சம்பவம், அதுவும் பல்கலைக் கழகப் பதிவாளரின் மீதே மோசமானளவில் குற்றச்சாட்டுக்கள் பல அடுக்கப்பட்ட சம்பவத்தையும் அப்படியே மூடி மறைத்து எதுவும் தெரியாதது போல் தாங்கள் இருப்பதை அனைத்து விதமான அசௌகரியங்கள் - தவறுகள் தொடர்வதற்குக் காரணம் என்பேன். அவற்றுக்குப் பின்னால் இருக்கும் சில விடயங்களை சுட்டிக் காட்டவும் விரும்புகிறேன்.

முதலாவதாக கல்விச் செயற்பாடுகளில் அதாவது பல்கலைக்கழக நடவடிக்கைகளில் அரசியல் செயற்பாடுகளை அடிப்படையாகக் கொண்ட காய் நகர்த்தல் என்பதிலிருந்து பல்கலைக்கழகம் விடுபட வேண்டும். கடந்த காலத்தில் ஏற்பட்ட அக்கறையீனமே பல ஊழியர் சங்கங்கள் பல்கலைக்கழகத்தில் ஸ்தாபிக்கப்பட்டதும் அவற்றின் கட்சி சார் நடவடிக்கைகள் பல்கலைக் கழகத்தின் நோக்கத்தை நிறைவேற்றத் தடையாக இருக்கக் காரணம். ஊழியர் நலன் காக்கவும் அவர்களின் நன்மை, தீமை பற்றிக் கதைக்கவும் ஒரு சங்கம் இருந்தால் போதும். எனவே கட்சி நலனைப் பாதுகாக்க பல்கலைக்கழகத்தை ஆயுதமாக உபயோகிக்கும் ஊழியர் சங்கங்கள் அவசியமில்லை. தற்போது அரசியல் சார்பற்ற பேரவை அமையப் பெற்றிருக்கிறது. இதன் மூலம் பல விடயங்களை நேர்மையாகவும், நிதானமாகவும் முன்னெடுக்க முடியும் என்று கருதுகிறேன்.



அண்மையில் யாழ். பல்கலைக்கழகத்தின் விருந்தினர் விடுதிப் பராமரிப்பாளராகவும் சமையல்காரராகவும் பணியாற்றும் ஒரு பெண் 06.09.2017 அன்று உங்களுக்கு எழுதிய கடிதத்தில் தன்னுடன் விருந்தினர் விடுதியில் இருந்த இருவர் (பெயர்களைக் குறிப்பிட விரும்பவில்லை) 31.08.2017 அன்றும் 01.09.2017 அன்றும் தகாத முறையில் நடந்து கொண்டதாகப் புகாரிட்டிருக்கிறார். அதில் 01.09.2017 அன்று உதவிப் பதிவாளரிடம் முறையிட்டதாகவும் குறிப்பிட்டுள்ளார். அதை விசாரித்துத் தகுந்த நடவடிக்கையையும் எடுக்கும்படி கேட்டும் உள்ளார். பின்பு தனது எதிர்கால நலன்களைக் கருத்தில் கொண்டு 12.09.2017 அன்று தங்களுக்கு எழுதிய பிறிதொரு கடிதத்தில் 'தற்போது எனது எதிர்கால நலனைக் கருத்தில் கொண்டு விசாரணைகளைத் தவிர்க்குமாறு கேட்டுக் கொள்ளுகிறேன" என்று மட்டும் எழுதியிருக்கிறரே தவிர குற்றமிழைத்தவர்களைத் தண்டிக்க வேண்டாம் என்று தங்களைக் கேட்கவில்லை.

தமிழ்க் கலாசார சூழலில் வளர்ந்த ஒரு பெண் இவ்வாறான கடிதமெழுத வேண்டியதொரு சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டது ஏனெனில் வெளியில் தெரிந்தால் தனது எதிர்காலம் பாழாகிவிடும் என்ற அச்சமே. அந்தக் கடிதத்தில் விசாரணையைத் தவிர்க்குமாறு கேட்டுள்ளாரேயொழிய, தன்னோடு தகாத முறையில் நடந்தவர்களுக்குக் கருணை காட்ட வேண்டும் என்றோ, இல்லாவிடில் அவர்களில் இரக்கப்பட்டோ எடுத்த முடிவுமல்ல; எழுதிய எழுத்துமல்ல என்பதை தாங்கள் புரிந்துகொள்ள வேண்டும். எனவே அந்தக் கடிதத்தை வைத்துப் பிரச்சினையை இருட்டடிப்புச் செய்யத் துணைபோக வேண்டாம் என்று தயவுடன் கேட்டுக் கொள்ளுகிறேன். இந்த விடயத்தில் தாங்கள் எடுக்கின்ற முடிவும், அவர்களுக்குக் கொடுக்கின்ற தண்டனையும் மற்றையோருக்கு ஒரு பாடமாக இருக்க வேண்டும் என்பதே எனது வேண்டுகோள்.

குற்றமிழைத்தவர்கள் என்று சந்தேகிக்கப்படும் சிரேஷ்ட உதவி நிதியாளர்கள் இருவரும் மிகுந்த செல்வாக்குள்ளவர்களாக இருக்கட்டும் அல்லது அங்கு பணியாற்றுபவர்கள் சொல்வது போல அவர்கள் 'தல்செவன' விடுதிக்கு விருந்துக்குச் செல்பவர்களாக இருக்கட்டும் அவர்களுக்குரிய அரசியல் - இராணுவப் பின்னணியைப் பார்த்து அச்சப்படத்தேவையில்லை என்பதே எமது கருத்து. இருந்தும் மேற்சொன்ன குற்றச்சாட்டை விசாரிக்கவெனத் தங்களால் ஒரு குழு நியமிக்கப்பட்டு தொடர்ச்சியாக 3 நாள்கள் விசாரணை நடைபெற்று அறிக்கையொன்றையும் பெற்றுள்ளீர்கள். அந்த விசாரணைக் குழு இது தொடர்பாகச் சில பரிந்துரைகளைத் தந்திருக்கிறது.

புதிய நியமனம்பெற்ற தொழிலாளி ஒருவர் தனக்குக் கொடுக்கப்பட்ட தகுதிகாண் இடைவெளியில் தனக்கு இழைக்கப்பட்ட பாலியல் ரீதியான பிரச்சினையை அதிகாரபூர்வமாக எழுத்தில் தெரிவித்தென்பது பாலியல் துன்புறுத்தலுக்கு எதிராகப் போராடக்கூடிய மனோபாவத்தைக் கொண்டிருப்பதையும் அண்மையில் பேரவையால் ஒப்புதலளிக்கப்பட்ட பால் தொடர்பான வழிமுறையில் கொண்ட அதீத நம்பிக்கையையும் எடுத்துக் காட்டுகிறது. எனவே இத்தகைய விடயங்களை நல்ல முன்னேற்றத்தின் அறிகுறியாகப் பார்ப்பதோடு அதற்கு ஒத்தாசையாக இருக்க வேண்டும். மேலும்,

( 22 ஆம் பக்கம் பார்க்க)

# வாரப்பலன்

### மேடம்

பிறரின் உதவிகள் கிடைக்கும், பணியில் செயற்றிறன் அதிகரிக்கும், பிள்ளைகளால் நற்பெயர் கிடைக்கும், எதிரியால் இருந்த தொல்லைகள் விலகும், குடும்பத்தில் ஒற்றுமை சிறக்கும், தொழிலில் வளர்ச்சியும் இலாபமும் அதிகரிக்கும்.

பெருமாளை வழிபடுங்கள்

### ரிஷபம்

திட்டமிட்ட முயற்சிகள் ஓரளவு பலன் தரும், சகோதரர்களால் உதவிகள் கிட்டும், பிள்ளைகள் வேலை வாய்ப்பை பெறுவர், பண வரவு உண்டு, வியாபாரத்தில் தடைகள் ஏற்படும்.

சனீஸ்வரரை வழிபடுங்கள்.

### மிதுனம்

மனதில் உற்சாகம் நிறைந்திருக்கும், அன்றாடப் பணிகள் எளிதில் நிறைவேறும், உறவினர்களுடன் நெருக்கம் அதிகரிக்கும், வழக்குத் தொடர்பில் நல்ல தீர்ப்பு கிடைக்கும், தொழிலில் இலாபம் ஏற்படும்.

வைரவரை வழிபடுங்கள்

### கடகம்

தாயின் அன்பும் ஆசியும் துணை நிற்கும், பிள்ளைகள் படிப்பால் பலனடைவர், மனைவியின் ஆசையை நிறை வேற்று வீர்கள், தொழிலுக்காக கடன் பெற வேண்டாம்.

தட்சிணாமூர்த்தியை வழிபடுங்கள்.

### சிம்மம்

நண்பர்களின் மனம் உணர்ந்து பேசுவீர்கள், சமூகத்தில் மதிப்பு, மரியாதை உயரும், குடும்பத்தில் ஒற்றுமை சீராக இருக்கும், உடல் ஆரோக்கியம் பலம் பெறும், தொழிலில் இலாபம் கிட்டும்.

துர்க்கையை வழிபடுங்கள்.

### கன்னி

உங்களின் நற்செயல் பெருமை சேர்க்கும், சகோதரர்களிடம் நெருக்கம் உண்டாகும், எதிர்பார்ப்புக்கள் நிறைவேறும், பிள்ளைகள் முன்னேற்றம் அடைவர், உடல் ஆரோக்கியம் பலம் பெறும்.

ஆஞ்சநேயரை வழிபடுங்கள்.

### துலாம்

நண்பரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும், திட்டமிட்டபடி புதிய முயற்சியில் ஈடுபடுவீர்கள், வாகனத்தில் பராமரிப்புச் செலவு கூடும், தொழிலில் தாராள பணவரவு கிடைக்கும்.

அம்மனை வழிபடுங்கள்

### விருச்சிகம்

கடன் பணம் மீண்டும் கிடைக்கும், உணவில் கவனம் எடுத்தல் வேண்டும், விஷப் பிராணிகளிடம் இருந்து விலகுவது நல்லது, தொழில் போட்டிகள் ஏற்படும், பிள்ளைகள் படிப்பில் முன்னேறுவர்.

சிவபெருமானை வழிபடுங்கள்

### தனுசு

சிறு பணியும் நேர்த்தியாக அமையும், தாய்வழி உறவினர்களிடம் நெருக்கம் ஏற்படும், பிள்ளைகளின் விருப்பத்தை நிறைவேற்றுவீர், செலவுக்கான பணம் தாராளமாக கிடைக்கும்.

ஐயப்பனை வழிபடுங்கள்

### மகரம்

பண வரவு அதிகரிக்கும், சகோதரர்களுக்கு உதவி செய்து மகிழ்வீர்கள், எதிரியை இனம் கண்டு விலகுவீர்கள், மனைவி குடும்ப ஒற்றுமையை ஏற்படுத்தவர்.

முருகனை வழிபடுங்கள்.

### கும்பம்

சுப நிகழ்வு உண்டாகும், பணத்தேவை அதிகரிக்கும், வழக்கில் வெற்றி கிடைக்கும், தொழிலில் விழிப்புடன் இருக்கவும். மணமான பெண்களுக்கு தாய் வீட்டு உதவி கிடைக்கும்.

சிவனை வழிபடுங்கள்.


### மீனம்

மனதில் புத்துணர்வு மேலோங்கும், பணிகளை விரைந்து நிறைவேற்று வீர்கள், உடல் ஆரோக்கியம் பலம் பெறும், தொழில் வளர்ச்சி பெறும்.

விநாயகரை வழிபடுங்கள்



யாழ். கோப்பாய் ஆசிரியர் பயிற்சி கலாசாலையில் வாணி விழா கடந்த 28ஆம் திகதி இடம்பெற்றபோது...



இலங்கைத் தமிழரசுக்கட்சியின் மன்னார் மாவட்ட அலுவலகம் கடந்த முதலாம் திகதி எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன், நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராஜா ஆகியோரால் திறந்து வைக்கப்பட்டபோது..



கொக்குவில் இந்துக் கல்லூரியின் வாணிவிழா இந்து மாமன்றத் தலைவர் க.ரகுராம் தலைமையில் கடந்த 27ஆம் திகதி கல்லூரியில் இடம்பெற்றவேளை...



வடமராட்சி - நெல்லியடி மத்திய கல்லூரியின் தொழில் நுட்ப பிரிவு அண்மையில் திறந்து வைக்கப்பட்டபோது...



தாவடி - வேதவிநாயகர் விளையாட்டுக் கழகத்தின் வாணி விழா கடந்த முதலாம் திகதி நடைபெற்றபோது...



சர்வதேச அஹிம்சா தினம் மற்றும் காந்தி ஜெயந்தி தினத்தன்று- கடந்த 3ஆம் திகதி யாழ்.போதனா வைத்தியசாலைக்கு முன்பாக உள்ள மகாத்மா காந்தி சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டபோது...

# குட்டீஸ்...!



உங்களின் படைப்புகள் அனைத்தும் புதுவிழியில் பிரசுரமாக வேண்டுமா? உடனே எழுதி அனுப்புங்கள்.

puthuvizhi@gmail.com



# குருவி வயிற்றில் மரம்

செண்பகக் காட்டில் ஏராளமான பறவைகள் இருந்தன. அவரவர் வேலைகளைக் கவனமாகச் செய்து வந்தன. சூரியன் உதிப்பதற்கு முன்பே, அதிகாலையில் இரைத் தேடப் புறப்படும் பறவைகள், மாலை வேளைதான் தங்களின் கூடுகளுக்கே திரும்பும்.

புங்கை மரத்தில் குருவி ஒன்று கூடுகட்டி வாழ்ந்துவந்தது. அது இரண்டு முட்டைகளை இட்டது. குஞ்சுகளுக்காக இலைகளை மெத்தைப் போல அலங்காரம் செய்து வைத்திருந்தது. சில நாள்களில் முட்டைகளிலிருந்து குருவிக் குஞ்சுகள் வெளியே வந்தன. அதைப் பார்த்ததும் தாய்க் குருவிக்கு மகிழ்ச்சியாக இருந்தது.

இரண்டு குருவிக் குஞ்சுகளும் பார்ப்பதற்கு மிகவும் அழகாக, துறு-துறுவென்று இருந்தன. 'க்ரிக்... க்ரிக்' என்று சத்தம் போட்டுத் தாயை அழைத்தன. தாய்க் குருவி குஞ்சுகளுக்குப் பசி என்று புரிந்துகொண்டது. உடனே தயாராக வைத்திருந்த சிறியப் புழுக்களை உணவாகக் கொடுத்தது.

சில வாரங்கள் சென்ற பிறகு, குஞ்சுகளுக்கு இறக்கைகள் முளைக்க ஆரம்பித்தன. அவை பறப்பதற்கு முயற்சி செய்தபடியே இருந்தன. குஞ்சுகளுக்காக உணவு தேடிப் போன தாய்க் குருவிக்கு ஒரு சப்போட்டா பழம் கிடைத்தது. அது மிகவும் இனிப்பான, சுவையான பழம். அதைத் தாய்க் குருவி, தன் குஞ்சுகளுக்காகக் கொண்டுவந்தது.

"குழந்தைகளே! இது இனிப்பான சப்போட்டா பழம். இதைச் சாப்பிடுவதற்கு முன்னாடி குளிச்சிட்டு வாங்க. நான் இலை கொண்டு வரேன்" என்று கூறிவிட்டுச் சென்றது தாய்க் குருவி.

இரண்டு குஞ்சுகளில் ஒன்று தாய் சொல்லைத் தட்டாமல் உடனே குளிக்க ஆற்றுக்குப் பறந்தது. இன்னொரு குருவிக்கு, அந்தச் சப்போட்டாவை உடனே சுவைக்க ஆசை வந்தது. முதலில் கொஞ்சமாக ருசித்துப் பார்த்தது. பழத்தின் சுவை குருவிக் குஞ்சுக்கு மிகவும் பிடித்துவிட்டது. 'அம்மாவும் தம்பியும் வருவதற்குள் மீதியையும் தின்றுவிடலாம்' என்று எண்ணி, முழுப் பழத்தையும் அப்படியே விழுங்கியது.

சற்று நேரத்தில் தம்பிக் குருவி வந்தது. அது வந்த சிறிது நேரத்தில் தாய்க் குருவியும் வந்தது.

இலையை விரித்து வைத்தது. சப்போட்டா பழத்தை எடுக்கச் சென்றது. வைத்த இடத்தில் பழம் இல்லை. திடுக்கிட்ட குருவி, தன் குஞ்சுகளைப் பார்த்து, "யார் பழத்தைத் தின்றது?" என்று கேட்டது. இருவருமே "நான் இல்லை" என்றனர்.

"உங்கள் இருவரில் யார் தின்றீர்கள் என்று தெரியவில்லை. கொஞ்சம் கொஞ்சமாக உண்டிருந்தால் அதன் விதைகள் இந்தக் கூட்டில்தான் விழுந்திருக்கும். ஆனால் கூட்டில் விதைகள் இல்லை. ஆக யாரோ ஒருவர் முழுப் பழத்தையும் விழுங்கிவிட்டீர்கள். அது வயிற்றுக்குள் சென்ற 24 மணிநேரத்தில் செடியாக முளைக்கத் தொடங்கிவிடும்" என்று அச்சுறுத்தியது தாய்.

குஞ்சுகள் இரண்டும் அம்மாவைப் பார்த்தபடியே இருந்தன.

"உங்கள் வயிற்றில் வளர்ந்த செடி, அடுத்த ஆறு வாரத்தில் மரமாகும். அந்த மரம் வளர்வதற்கு வயிற்றில் இடமிருக்காது. அதனால் வயிறு லேசாக விரிசல் விடும். அப்புறம்..." என்று தாய்க் குருவி சொல்லி முடிப்பதற்குள் குறுக்கிட்டது ஒரு குருவிக் குஞ்சு. "அம்மா! என்னை மன்னிச்சுடுங்க. நான்தான் அந்தப் பழத்தை அப்படியே முழுங்கிவிட்டேன். இனி இது போன்ற தவறைச் செய்ய மாட்டேன். என் வயிற்றில் செடி முளைக்காமல் இருக்க ஏதாவது வழி இருந்தால் சொல்லுங்கள்" என்று பயந்து அழுதது அந்தக் குருவிக் குஞ்சு.

"நீதானா! சரி... சரி.. அழாதே" என்று ஆறுதல் சொன்னது தாய்க் குருவி.

"ஐயையோ அண்ணன் மரத்தை முழுங்கிட்டான்" என்று அழுதது மற்றொரு குருவிக் குஞ்சு.

"மகனே! பயம் வேண்டாம். விதைகள் மண்ணில் புதைந்தால்தான் செடிகளாகும். அந்தச் செடிகள்தான் மரங்களாகும். பழத்தைத் தின்றது யார் என்பதைக் கண்டறியவே அப்படிச் சொன்னேன்" என்றது தாய்க் குருவி.

குருவிக் குஞ்சுகள் நிம்மதியடைந்தன. அன்று முதல் பறவைகள் பழங்களை உண்ட பிறகு, விதைகளைப் பூமியில் எச்சங்களாக விடுகின்றன. அவற்றிலிருந்து தாவரங்கள் முளைக்கின்றன!

## தகவல் அறிவோம்...!



### குதிரை சில தகவல்கள்

- குதிரைகள் 335 - 340 நாள்கள் கருவை சுமக்கும்.
- குதிரைக் குட்டிகள் பிறந்த சில நிமிடங்களிலேயே எழுந்து நடக்க ஆரம்பித்து விடுகின்றன.
- குதிரைகள் சராசரியாக 25 - 30 ஆண்டுகள் உயிர் வாழும்.
- குதிரைகள் சராசரியாக 60 தொடக்கம் 62 அங்குலம் உயரம் கொண்டவை.
- குதிரைகளின் உயரத்தை அளக்கும் போது கழுத்தும் உடலும் சேரும் பகுதியே அளக்கப்படுகின்றது.
- குதிரையின் உடலில் சராசரியாக 205 எலும்புகள் உள்ளன.
- குதிரைகளால் நின்றவாறே தூங்க முடியும். அதற்குக் காரணம் கால்முட்டியே. இதன் கீழ் அவற்றுக்கு தசைகள் இல்லை.
- குதிகளின் வயதின் அடிப்படையில் போல், யார்லிங், கோல்ட், பில்லி, மேர், பொலிக்குதிரை என அழைப்பர்.
- குதிரைகளின் வயதை அவற்றை பற்களின் எண்ணிக்கையை வைத்துக் கணக்கிட முடியும். அவற்றின் வாழ்நாள் முழுவதும் பற்கள் வளர்ந்து கொண்டே இருக்கும்.
- நன்கு வளர்ந்த குதிரை தினமும் 7 - 11 கிலோ உணவை உண்கின்றன. அத்துடன் 38 -45 லீற்றர் நீரை அருந்துகின்றன.
- குதிரைகளின் குடலுக்கு முன்பாக சீக்கம் என்ற சிறப்பான பொருள் உள்ளது. இதனால் அவற்றால் சத்தி (வாந்தி) எடுக்க முடியாது. சில வேளைகளில் நச்சுப் பொருள்களை உண்டால் அவை மரணித்துவிடும்.
- கி.மு. 4000 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே மனிதனால் பழக்கப்பட்ட விலங்கு, இருபதாம் நூற்றாண்டு வரை போக்குவரத்துக்கு உதவியது குதிரைகளே.

## உங்களுக்குத் தெரியுமா...?


- நமது இரத்தம் ஒரு நாளில் சுமார் 30 கோடி கிலோமீற்றர் பயணிக்கின்றது.
- ஒரு சராசரி மனிதனின் உடலில் உள்ள நரம்புகளின் நீளம் சுமார் 72 மீற்றர்கள்.
- எமது நாக்கில் சுவை அறியும் செல்கள் 3,000 உள்ளன.



- கைரேகையைப் போன்றே நாக்கில் உள்ள வரிகளும் ஒவ்வொருவருக்கும் வேறுபடும்.
- நம் இதயம் ஒரு நாளில் ஒரு இலட்சத்து 3 ஆயிரத்து 689 முறை துடிக்கின்றது.
- நம் உடலில் சதையின் அழுத்தம் அதிகம் உள்ள பகுதி நாக்கு.
- நம் உடலில் இருக்கும் கார்பன் சக்திகளைக் கொண்டு 900 பென்சில்களைத் தயாரித்து விடலாம்.
- நம் உடலில் 25 வாட்ஸ் மின் சக்தி உள்ளது.
- கண் தானத்தில் கறுப்பு விழிகள் மட்டுமே அடுத்தவருக்குப் பொருத்தப்படுகின்றன.
- நம் உடலில் மிகவும் பலமானது விரலில் இருக்கும் நகங்களே. மரணத்தின் பின்னர் கூட நகங்களுக்கு எதுவும் ஆவதில்லை.



# கலியுக தெய்வம் ஷீரடி சாய்பாபா



கலியுகத்தின் கண்கண்ட தெய்வமாக எங்கெங்கும் வியாபித்திருந்து, அருள்மழை பொழிந்து வருகின்றார். அவர் எங்கு, எப்போது பிறந்தார் என்பது யாருக்குமே தெரியாது. அவருடைய தோற்றம்தான் புதிராக இருந்தது என்றால், அவருடைய மொழிகளும், நடவடிக்கைகளும் கூட பல நேரங்களில் புதிராகவே இருந்தன. இதை அவருடைய சத்சரிதத்திலிருந்து நாம் அறிந்து கொள்ளலாம். அவர் தாம் மகாசமாதி அடையப்போகும் நாளைக் கூட இரண்டு வருடங்களுக்கு முன்பாகவே 1916 ஆம் ஆண்டு மற்றவர்களுக்கு உணர்த்தவே செய்தார். ஆனால், மற்றவர்கள் அதை உணரவில்லை. 1918 ஆம் ஆண்டு விஜயதசமி நாளில் சாய்பாபா மகா சமாதி அடைந்தார்.

தம்முடைய மகா சமாதிக்குப் பிறகும், தாம் அளவற்ற ஆற்றலுடன் தம் பக்தர்களுக்கு அருள் புரிவேன் என்று தாம் கொடுத்த உறுதிமொழியின்படி இன்றும் தம்மைச் சரணடைந்தவர்களுக்கு அருள்புரிந்து வருகிறார். அவர் தம்முடைய ஜீவித காலத்தில் நடத்திய சில அருளாடல்களை இங்கே பார்ப்போம்.

**தண்ணீரில் விளக்கேற்றிய தயாபரன்!**

ஒவ்வொரு நாளும் மாலை நேரத்தில் மசூதியில் தீபம் ஏற்றுவது பாபாவின் வழக்கம். அதற்காக தினமும் கடைத் தெருவிற்குச் சென்று வியாபாரிகளிடம் எண்ணெய் வாங்கி தீபம் ஏற்றுவார். சில நாள்கள் இப்படியே சென்றன. ஒருநாள் கடைக்காரர்கள் அனைவரும் ஒன்றுகூடி ஒரு முடிவு செய்தனர். அதன்படி இனி யாரும் பாபாவுக்கு எண்ணெய் கொடுக்கக் கூடாது என்று முடிவெடுத்தனர். பாபாவுக்குக் கொடுக்கும் எண்ணெய்க்குக் காசு வராது என்பதால்தான் அந்த முடிவுக்கு வந்தனர். இதை அறிந்த மகான் அவர்களுக்கு ஞானம் அளிக்க விரும்பினார். எனவே, அவர் அந்த எண்ணெய் வியாபாரிகளிடம் சென்று எண்ணெய் கேட்டார். ஆனால், அவர்கள் யாரும் எண்ணெய் கொடுக்க முன்வரவில்லை.

அனைத்தும் அறிந்த சாயிநாதர் எதுவும் பேசாமல் தன் மசூதிக்குச் சென்றார். அவர் என்ன செய்கிறார் என்பதைக் காண எண்ணெய் வியாபாரிகள் அவரைப் பின் தொடர்ந்து சென்றனர். பாபா எண்ணெய் போத்தலை கையில் எடுத்து, அதில் சிறிது நீர் ஊற்றினார். அதைத் தன் வாயில் ஊற்றி பின்னர் அந்த நீரை மறுபடியும் எண்ணெய்ப் போத்தலில் நிரப்பி, அதைத் விளக்குகளில் ஊற்றினார். அவரைச் சாதாரண மானிடர் என்று அதுவரை எண்ணியிருந்த வியாபாரிகள் அதிசயிக்கும் வகையில் தீபங்கள் எரியத் தொடங்கின. இதைக் கண்ட வியாபாரிகள் அவரின் பாதத்தில் வீழ்ந்து வணங்கினர். இவ்வாறு பாபா அவருக்கு ஞானம் வழங்கி ஆசி கூறினார். மேலும் என்றும், எவரிடத்தும் பொய் கூறக்கூடாது என்றும், எப்போதும் பொருளாசை இருக்கக் கூடாது என்றும் கூறினார்.

**மன அமைதி அருளும் மகான்!**

ஞானத்தை மட்டுமல்லாது தன்னை நாடி வரும் பக்தர்களுக்கு மன அமைதியையும் அளிப்பவர் பாபா. வாணி என்ற கிராமத்தைச் சேர்ந்த காகாஜி வைத்தியர் என்பவர் சப்தசிருங்கி தேவியின் ஆலயத்தில் பூசாரியாக இருந்தார். அவர் தினமும் தேவிக்கு பூஜை செய்து வந்த போதிலும் அவரது மனமானது வேதனைகளால் நிறைந்து அமைதியிழந்து இருந்தது. மனஅமைதி பெற விரும்பிய அவர், தான் தினமும் வழிபடும் சப்தசிருங்கியிடம் வழி கேட்டார். அவர் மேல் இரக்கம் கொண்ட தேவி அவரை பாபாவைச் சென்று வணங்கும்படியும் அதனால் மனமானது அமைதியடையும் என்றும் கூறினாள்.

சாயிநாதரைப் பற்றி எதுவும் அறிந்திராத காகாஜி, பாபா என்று சப்தசிருங்கி தேவி குறிப்பிட்டது த்ரயம்பகேஷ்வரில் உள்ள ஈஸ்வரனையே ஆகும் என்று தன்னுள் எண்ணியவர், த்ரயம்பகேஷ்வர் சென்றார். அங்கு பத்து நாள்கள் தங்கி ஈஸ்வரரை வழிபட்ட பின்னும் அவர் மனமானது அமைதி பெறவில்லை. எனவே, மீண்டும் அவர் தன் கிராமத்திற்குத் திரும்பினார். மீண்டும் தேவியை வணங்கிய அவர் தன் மீது கருணை கொண்டு தனக்கு மன அமைதி கிட்ட வழி கூற வேண்டும் என்று வணங்கினார். அவர்மீது இரக்கம் கொண்ட தேவி மீண்டும் அவர் கனவில் தோன்றினாள். தான் பாபா என்று குறிப்பிட்டது ஷீரடி சமர்த்த சாயியையே என்றும் வீணாக ஏன் த்ரயம்பகேஷ்வர் சென்றாய்? என்றும் வினவினாள். அவ்வாறு கூறிவிட்டு உடனே மறைந்து விட்டாள். உறக்கத்திலிருந்து விழித்த காகாஜி தனக்கு ஷீரடியைப் பற்றி எதுவும் தெரியாததால், தான் எவ்வாறு ஷீரடியை அடைந்து பாபாவை தரிசிப்பது என்று எண்ணியிருந்தார்.


நாம் கடவுளைக் காண வேண்டும் என்று நினைத்தால் மட்டும் அவருடைய தரிசனம் நமக்குக் கிடைத்துவிடாது. கடவுளின் பூரண அனுக்கிரகம் நமக்கு இருந்தால் மட்டுமே அவரைக் காண இயலும். ஆனால், பாபாவின் விசயத்தில் அவரின் பக்தர்கள் அவரைக் காண எண்ணினாலே போதும் எப்படியேனும் அவர்களைத் தன்னிடம் கூட்டி வருவார்.

அவ்வாறே காகாஜிக்கும் நிகழ்ந்தது. ஷீரடியைச் சேர்ந்தவரும், சாயிபாபாவின் பெரும் அடியவருமான ஷாமா என்பவரின் சகோதரர் ஒருமுறை ஒரு ஜோதிடரைச் சந்தித்தார். அவரிடம் தன் குடும்பத்தில் பல சோதனைகள் ஏற்பட்டிருப்பதாகவும், அதனைப் போக்க ஏதேனும் வழி கூறுமாறும் கேட்டார்.

அதற்கு அந்த ஜோதிடர், "உங்கள் தாயார், உங்கள் சகோதரர் ஷாமா சிறு பிள்ளையாக இருக்கும்போது உடல்நிலை சரியில்லாமல்போன காரணத்தால், உங்கள் குலதெய்வமான சப்தசிருங்கியிடம், ஷாமாவின் உடல்நலம் சரியானால் குடும்பத்துடன் வந்து வழிபடுவதாகவும் கூறினார். அவர் அவ்வாறு வேண்டிய உடனே ஷாமாவின் உடல்நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டது. ஆனால் அவர் குலதெய்வத்திடம் வேண்டியதை மறந்துவிட்டார்.

( 18 ஆம் பக்கம் பார்க்க)


17 வருடங்களாக வாடிக்கையாளர்களின்
நம்பிக்கை
மாபெரும்
கலண்டர்
திருவிழா!
JANUARY 2018
கலண்டர்களின் கொண்டாட்டம் மீண்டும்
கரிகணனில்
நந்தவனப் பூக்களைப்போல் எண்ணிலடங்கா வடிவமைப்புக்கள்
எதை எடுப்பது? எதை விடுப்பது?
இவ்வளவு குறைந்த விலையில் வேறு யார் கொடுப்பது?
முதற்கட்டப் பதிவுகளை மேற்கொள்வதன் மூலம்
குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
கரிகணன்
வடக்கின் அச்சகதாரர்
கல்விச் சமூகத்தோடு ஒன்றிய நிறுவனம்
Offset | Digital | Screen | Design
இல.681, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
+94 21 222 2717 | 8



நண்பர்கள், உறவினர்கள் மற்றும்
குடும்பத்தினருடன் ஒன்றாக இருந்து
உண்டு மகிழ விசாலமான இருக்கைகளுடன்
நாகரிகமான சூழலில், வாய்க்கு ருசியான
பல்வேறுபட்ட உணவுவகைகளை உண்டு மகிழுங்கள்.!
PIZZA
Party Pack
Mini : 2,450/=
1 Large Pizza, 2 Fried Rice, 1 Kottu, 1 Noodles, 1 2L Mega (6-8 பேர் பகிரக் கூடியது)
Party Pack
Medium : 4,800/=
2 Large Pizza, 3 Fried Rice, 2 Kottu, 2 Noodles, 2 2L Mega (15-18 பேர் பகிரக் கூடியது)
Party Pack
Large : 9,400/=
4 Large Pizza,6 Fried Rice, 4 Kottu, 4 Noodles, 4 2L Mega, (30-35 பேர் பகிரக் கூடியது)
சிக்கன் அல்லது மரக்கறி வகைகள் மட்டுமே
Wi Fi
HALAL
✓ Jaffna Style Masala Pizza விசேடமாக எமக்கு பொருத்தமான சுவையில் தயாரிக்கப்படுகிறது.
✓ Italian / Chinese Choice Pizza வெளிநாட்டவர்களுக்குப் பொருத்தமான சுவையில் சுவையில் தயாரிக்கப்படுகிறது.
✓ Fresh Juice, Milkshake மற்றும் மென்பாணங்கள்
✓ Sea Food, Mutton உணவு வகைகள்
✓ திருமண, பிறந்தநாள் விசேட ஓடர்களும் ஏற்றுக்கொள்ளப்படும்.
021 221 6700
யாழ் நகரில் இருந்து 5 Km வரையான தூரங்களில் உள்ள இடங்களுக்கு இலவசமாக விநியோகிக்கப்படும்.
11 TO ELEVEN
PiZZA
RESTURANT
128, Palaly Road (Next to Parameswara Junction), Jaffna.
Tel: 021 221 6700 / 0777 444 225

அவளுடைய மூதாதைகள் 'அவளுக்கு' என்று வைத்து விட்டுப் போனது அந்த ஆலமரம் ஒன்றைத்-தான். அந்த உடைந்த சட்டி, விளிம்பில்லாத பானை, அடுப்பாக உபயோகிக்கும் மூன்று கற்கள், தென்னம்பாளை யாவும் அவளாகத் தேடிக்கொண்டவை. அவள் அறிந்தமட்டில் அவளுக்கு இன பந்துகள் யாருமிருப்பதாகத் தெரியவில்லை. எலும்பினாலும், தோலினாலும் மாத்திரமே ஆக்கப்பட்டது போன்ற ஒரு நாய்தான் அவளுடைய பந்து: உயிருக்குயிரான காவலாளியுங் கூட....

சிறுகதை



# ஆலமரம்*

- தாளையடி சபாரத்தினம் -

காலையில் எழுந்தவுடன் தென்னம்பாளையினால் அம்மரத்தைச் சுற்றி நன்றாகச் சுத்தம் செய்வாள். அருகே இருக்கும் நீரோடைக்குச் சென்று பானையில் நீர்கொண்டு வந்து தான் கூட்டிய இடங்கட்குத் தெளிப்பாள். பின் பழைய சோறு ஏதாவது இருந்தால் தானுமுண்டு தன் நாய்க்கும் கொடுப்பாள். பொழுது நன்றாகப் புலர்ந்ததும், அந்த உடைந்த சட்டியைக் கையிலெடுத்துக் கொண்டு பிச்சைக்குப் புறப்படுவாள். போகும்போது தன் நாயை வாத்சலயத்தோடு தடவிவிட்டுச் செல்வாள். அதுவும் தன் வாலை இருதயபூர்வமான நன்றியைக் கண்கள் மூலம் தெரிவிக்கும்.

தெருத் தெருவாக அலைவாள் - மூலை முடுக்கெல்லாம் போவாள் - யாராவது இரங்கி ஏதாவது உணவு கொடுத்தால், அதைப் பத்திரமாக உண்ணாமல் வைத்துக் கொள்வாள். 'ஏன் சாப்பிடாமல் கொண்டு போகிறாய்?' என்று கேட்டால் 'நடக்கமுடியாத ஒரு கிழவனுக்குக் கொண்டு போகிறேன்' என்று கூறுவாள். அவள் வரவை ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டு ஏங்கியிருக்கும் அந்த நாயின் அருமை அவளுக்கல்லவோ தெரியும். ஆலமரத்தடியில் மறைத்து வைக்கப் பட்டிருக்கும் கந்தல்களையும் மற்றப் பொருட்களையும் பாதுகாத்துக் கொண்டிருக்கும் காவலாளி அல்லவா அது.

சுமார் இரண்டு மூன்று மணிக்குத் தன் இருப்பிடம் நோக்கி விரைந்து செல்வாள். அவளுக்கு முன்னால் அவளுடைய உள்ளம் பறந்து கொண்டிருக்கும். தூரத்தில் வரும் பொழுதே கரிய முகில் கூட்டத்தைப் போல ஆலமிலைகளின் கூட்டம் காட்சியளிக்கும். அவளுடைய உருவம் கண்ணிற்பட்டதும் தாயைக் கண்டவுடன் துள்ளிக்குதித்தோடும் பசுக் கன்றைப்போல் அந்த நாய் ஓடிச்சென்று அவளைச் சுற்றி சுற்றி வாலைக் குழைக்கும். அவளும் அன்போடு அதைத் தடவிக் கொடுப்பாள்.

ஆலமரத்தின் கீழே உட்கார்ந்ததும் அவளுடைய களைப்பெல்லாம் மாயமாய் மறைந்துவிடும். கொண்டு வந்ததை நாயோடு பகிர்ந்து உண்பாள். சிறிது நேரம் சென்றபின் பக்கத்திலுள்ள நீரோடைக்குச் சென்று குளிப்பாள். சுமார் ஆறு, ஏழு மணியளவில் அரிசி இருந்தால் சோறாக்குவாள்.

இதற்கிடையில் அவளுடைய நண்பர்கள் - காகங்கள், குயில்கள் முதலியன கா, கூ என்று ஆரவாரித்துத் தாங்கள் வந்திருப்பதை அவளுக்குத் தெரிவிப்பார்கள். எல்லோரும் உறங்கியபின் அவளும் அந்த வேரில் தன் தலையைச் சாய்ப்பாள். அந்த ஆலம்வேர்தான் அவளுடைய தலையனை. அவளுடைய குருட்டுத் தாத்தா உறங்கியதும் அதே வேரில் தலை வைத்துத்தான். சீமேந்தால் மெழுகப்பட்ட கவரைப்போல அந்தவேர் அழுத்தமாக இருந்தது.

அன்றும் அவள் அதே வேரில் தான் தலைவைத்துக் கொண்டு நிம் மதியாகத் தூங்கினாள். அந்தநாயும் அவளின் காலடியில் தூங்கிக் கொண்டிருந்தது. திடீரென்று ஒரு பயங்கரமான கனவு கண்டு துடித்து எழுந்தாள். வாய் என்னவோ கூறி உளறியது. மரத்தைச்சுற்றி ஒருமுறை வந்தாள். அப்பொழுதும் அவளுக்குத் திருப்தி உண்டாகவில்லை. நன்றாக ஒருமுறை அண்ணாந்து பார்த்தாள். மரம் மரமாகத்தானிருந்தது. அது முறிந்து வீழ்ந்து விடவில்லை. கண்டது வெறும் கனவாக இருந்தா லும் அவளுடைய உள்ளத்தில் சகிக்க முடியாத வேதனை குடி கொண்டது. பொங்கி வரும் கண்ணீரை அடக்கினாள்: ஆனால் அடக்கமுடிய வில்லை. அருகே கவலை தேங்கிய முகத்தோடு நின்ற நாயை அருகிழுத்து அணைத்துக்கொண்டாள். அதுவும் தன்னுடைய நாவால் அவளுடைய கரத்தை நக்கியது. இரவு முழுவதும் தூங்காமல் விழித்துக் கொண்டிருந்தாள்.

பொழுது புலர்ந்ததும் வழக்கம் போல் சட்டியைக் கையில் எடுத்துக்கொண்டு புறப்பட்டாள். அவளுடைய மனம் சஞ்சலப்பட்டது. தான் கண்ட பயங்கரமான கனவை ஒருமுறை நினைத்துப் பார்த்தாள். ஒருவேளை உண்மையில் அப்படி நடந்தால்... நினைக்கவே அவளுடல் நடுங்கியது. கால்கள் செல்ல மறுத்தன. எத்தனை நாட்களுக்குப் போகமலிருக்க முடியும்? ஒருநாள் பிச்சைக்குச் செல்லாவிட்டால் அவளுடைய கதி என்ன? அவளையே நம்பிக் கொண்டிருக்கும் நாயின் கதிதான் என்ன? மனக்கலக்கத்தோடு புறப்பட்டாள். மரத்திலிருந்து இரண்டு மூன்று பனித்துளிகள் அவள்மேல் வீழ்ந்தன. பரிதாபத்தோடு அண்ணாந்து பார்த்தாள். மறுபடியும் பனித்துளிகள் வீழ்ந்தன. அவள் அதைக் கேவலம் பனித்துளிகளாக நினைக்கவில்லை. 'நிராதரவாக என்னை விட்டுப் போகிறாயா' என்று அந்த ஆலமரம் கதறிப் பெருக்குங் கண்ணீர்தான் அத்துளிகள் என்று நினைத்தாள். அவள் கண்களும் நீரைச் சொரிந்தன.

அவள் பிச்சைக்குச் சென்றுவிட்டாள். ஆனால் மனம் மட்டும் நிம்மதியாயில்லை. வழக்கத்திற்கு விரோதமாகப் பன்னிரண்டு மணிக்கே இருப்பிடத்தை நோக்கி நடந்தாள். எல்லோருங் கூட்டங் கூட்டமாக நின்று எதையோபற்றி ஆனந்தத்தோடு பேசிக்கொண்டு நின்றார்கள். அதை என்னவென்றறிய அவளுக்குமாசை தான், ஆனால் அவர்களிடம் சென்று அறியக்கூடிய தகுதி அவளுக்கு இல்லை. அவ்வழியால் வந்த ஒரு சிறுமியிடம் விசாரித்தபொழுது, 'எங்கள் கிராமத்திற்கு ரெயில் பாதை போடப்போகிறார்களாம். இன்னுமிரண்டு, மாசத்துள் ரெயில் ஓட ஆரம்பித்துவிடும் என்று அப்பா சொன்னார்' என்றாள் சிறுமி.

ரெயில் வந்தாலென்ன?, ஆகாயக் கப்பல் வந்தாலென்ன? பிச்சைக்காரி யாகிய அவளுக்கு இரண்டுஞ் சரிதானே? இருப்பிடத்தை நோக்கி அவள் விரைவாக நடந்தாள்.

'இதென்னடா சனியன்! வேலை செய்ய விடமாட்டேனென்கிறதே' என்றானொருவன். ஆங்கில உடையில் நின்ற எஞ்சினியரின் கைத்துப்பாக்கி 'டுமீல்' என்ற சத்தத்தோடு வெடித்தது. இவ்வளவு நேரமும் மரத்தைச் சுற்றிச்சுற்றித் தன் எஜமானியின் பொருட்களுக்காகப் போராடிய அந்த நாய் மண்ணிற் சாய்ந்தது. சுமார் கால் மைல் தூரத்தில் வரும்பொழுதே தென்படும் ஆலமரம் இன்று வெகு சமீபத்தில் வந்ததும் அவள் கண்ணுக்குப் புலப்பட வில்லை. ஆலமரம் இருந்த இடம் ஒரே வெளியாக இருந்தது. இரவு கண்டகனவு அவள் ஞாபகத்திற்கு வந்தது. கையிலிருந்த சட்டி 'தடா'லென்று வீழ்ந்தது. மரத்தடியை நோக்கி ஓடினாள். அவளுடைய சாமான்கள் ஒரு பக்கத்தில் எறியப் பட்டுக் கிடந்தது. இன்னொரு பக்கத்தில் அவளுடைய நாய் உயிரற்றுக் கிடந்தது. மறுபக்கம் திரும்பினாள். மாறி மாறி விழும் கோடாரிக்கொத்தைத் தாங்க மாட்டாமல் தவிக்கும் மரத்திலிருந்து உதிரம் பெருகுவது போலிருந்தது அதிலிருந்து வடிந்த பால், 'ஐயோ' என்றலறிக் கொண்டு ஓடிப்போய் வீழ்ந்தாள். திடீரென்று ஒரு கோடாரிக் கொத்து அவளுடைய தலையில் வீழ்ந்தது. எல்லோரும் திகைத்துப்போய் நின்றார்கள். வெண்ணிரத்தமும் செவ்விரத்தமும் கலந்து அடிமரத்தைக் கழுவிக்கொண்டன.

# பார்வையைப் பறித்த பச்சை குத்தல்





காட் காலிங்கர் 24 வயதே ஆன கனடாவின் மொடல் அழகி. பச்சை குத்துவதில் இவருக்கும் பெரு நாட்டம். கண்ணில் பச்சை குத்துவது தானே இப்போது ட்ரெண்ட். இதனால் அவரும் கண்ணில் பச்சை குத்திக் கொண்டார். ஆனால் பரிதாபம்...! பச்சை குத்துவதில் எங்கோ தவறு நேர்ந்து விட்டது. அவரின் கண்ணில் இருந்து ஊதா நிறத்தில் கண்ணீர் வடிய ஆரம்பித்தது.

உடனடியாக வைத்தியசாலைக்கு சென்று சிகிச்சை எடுத்தார். ஆனாலும் நிலைமையில் பெரிய மாற்றமில்லை. கண்கள் வீங்கின. இமையைத் திறக்கக்கூட முடியவில்லை. இடது கண் பார்வையை இழந்தது. இலட்சக்கணக்கில் பணம் செலவழித்தும் பார்வை திரும்ப வில்லை. பச்சை குத்தப் பயன்படுத்தப்பட்ட மை கண்ணின் கருவிழியை பாதித்ததால் அவர் பார்வையை இழந்தார். அது மட்டுமில்லை சத்திர சிகிச்சை செய்தாலும் கண்களில் பார்வை முழுமையாகத் திரும்பப் போவதில்லை என மருத்துவர்கள் கூறிவிட்டார்கள்.

எதிர்காலத்தில் தன்னைப் போல் பிறரும் பாதிக்கப்பட்டுவிடக் கூடாது என்பதற்காக அவ'ர் கண்ணை வீடியோ எடுத்து முகப்புத்தகத்தில் பதிவிட்டுள்ளார். அத்துடன் 'கண்களில் பச்சை குத்தும் முன்பாக ஆயிரம் தடவை யோசியுங்கள். பச்சை குத்துபவர் தரமானவரா, தகுதியானவரா என்பதையும் விசாரித்து அறிந்துகொள்ளுங்கள். முடிந்தவரை கண்களில் பச்சை குத்துவதை தவிருங்கள்" என்று அறிவுறுத்தியுள்ளார்.

பட்டுத் தெளிந்த நல்ல அறிவுரை...!

# 24 மணி நேரத்தில் 1,500 அடி நீள பாலம்



24 மணி நேரத்தில் ஒரு பாலத்தை அமைப்பது என்பது சாத்தியமா...? சாத்தியமே என நிரூபித்திருக்கிறார்கள் ரஷ்ய இராணுவத்தினர்.

இவர்கள் அமைத்திருப்பது சாதரண பாலம் அல்ல, 1,500 அடி நீளமான மிதக்கும் பாலம். இந்தப் பாலத்தை உலகின் மிகப் பெரிய நதிகளில் ஒன்றான யெனீஷி நதியின் மேலாகவே அமைத்திருக்கிறார்கள். ஹெலிகொப்டரில் இருந்து கட்டளைகளைப் பிறப்பிக்க நூற்றுக் கணக்கான வீரர்கள் மிதக்கும் பாலங்களை இணைத்து பாலத்தை அமைத்தனர். அதன் பின்னர் 3 தட்டுக்களை அந்தப் பாலத்தில் பொருத்தினர். எல்லாம் முடிந்த பின்னர் நீராவி ரயில் ஒன்றை பாலத்தின் மேலாக பயணிக்கச் செய்தனர். ரயிலைத் தொடர்ந்து இராணுவ வாகனங்கள் சிலவும் பயணித்தன. ரஷ்ய இராணுவத்தின் இந்த அபார திறமையைப் பார்த்து உலகினர் வியந்துபோயுள்ளனர்.



இராணுவ பலம் என்பது இதுதானோ...?

# இளவரசன் - இளவரசிக்கு திருமணம் செய்யலாமா...?



திருமணம் என்பது ஒவ்வொருவரின் வாழ்விலும் அற்புத தருணம். அதை பெரு விழாவாக செய்வதற்கே அனைவரும் ஆசைப்படுவர். பல இலட்சங்கள் ஏன் பல கோடிகளை கொட்டி நடக்கும் திருமணங்கள்தான் அதிகம். இந்தத் திருமணங்களில் அதிகம் செலவாவது மணப் பெண்ணின் ஆடைக்குத்தான். இதை சாட்டாக வைத்துத்தான் நுட்பமாகப் பணத்தை கறந்து விடுவார்கள் வியாபாரிகள்.

ஜப்பானில் மணப்பெண்களுக்கு ஆடைகளை வாடகைக்கு விட்டு பணம் பார்க்கிறது குராவ்டியா கோ நிறுவனம். இது டிஸ்னியின் இளவரசிகள் அணிவது போன்ற ஆடைகளை தயாரித்திருக்கிறார்கள். பனி வெள்ளை, சிண்ட்ரெல்லா, ரபுன்செஸ், ஸ்லீப்பிங் பியூட்டி, ஏரியல், பெல் என 14 இளவரசிகளின் ஆடைகளை வடிவமைத்து வாடகைக்கு விடுகிறார்கள். இவர்கள் திருமண ஆடைகளை மட்டுமின்றி மணமகனுக்கான ஆடைகள், திருமண மண்டபத்தையும் வாடகைக்கு விடுகிறார்கள். அத்துடன் ராஜ விருந்துபசாரமும் வழங்குகிறார்கள்.

இந்த ஆடையை அணிந்தால் மணமகள் நிஜ இளவரசி போல் இருப்பார். இந்த ஆடைகளை விலைக்கு வாங்க எல்லோருக்கும் வசதி இருக்காது என்பதால் வாடகைக்கு விடப் போவதாக சொல்கிறார்கள் குராவ்டியா கோ நிறுவனத்தினர். வரும் நவம்பர் முதலாம் திகதி தொடக்கம் இந்த ஆடைகள் விடப்படவுள்ளன. அது சரி ஆடைக்கான வாடகை எவ்வளவு என்று நினைக்கிறீர்கள்... கொஞ்சம் மூச்சைப் பிடித்துக் கொள்ளுங்கள் 4 இலட்சம் யென்கள் - அதாவது எங்கள் நாட்டின் மதிப்பில் 5 இலட்சத்து 40 ஆயிரம் ரூபா. மேலதிகமாக ஒரு இலட்சம் யென் - ஒரு இலட்சத்து 35 ஆயிரம் ரூபா கொடுத்தால் இளவரசனின் அதாவது மணமகனின் உடை கிடைத்துவிடும். அட போங்கப்பா... வாடகைக் காசிலேயே கல்யாணத்தை நடத்திடலாம்...!

# குர்ஸ்க் நீர்மூழ்கி கப்பலின் கண்ணீர்க்கதை



– ஜோர்ஜ் அன்ரனி –

வல்லரசு நாடுகள் எல்லாமே நீர்மூழ்கிக் கப்பல்களை வைத்திருக்கின்றன. அவை தொழில்நுட்ப வசதிகளில் கில்லி. தொழில்நுட்பங்களை பயன்படுத்தி உலவ விடப்பட்ட பல நீர்மூழ்கிக் கப்பல்களை அதே தொழில்நுட்ப வசதிகளைப் பயன்படுத்தி தேடவும் வைத்திருக்கின்றன. சிலவற்றைக் கண்டுபிடித்தார்கள். சிலவற்றை குற்றுயிரும் கொலையுயிருமாக மீட்டார்கள். தேடியது போதுமென சில கப்பல்களை அப்படியே விட்டுவிட்டார்கள். அப்படி தொலைந்து போய், பிறகு தேடிக் கண்டுபிடித்து கடலுக்குள் அப்படியே விட்டுவிட்டு வந்த ஒரு கப்பல்தான் "இன்விசிபிள் குர்ஸ்க்"

குர்ஸ்க், நீர்மூழ்கிக் கப்பல் ரஷ்யாவுக்குச் சொந்தமானது. அணுசக்தியால் இயங்கக் கூடிய குர்ஸ்க் கப்பலின் மொத்த எடை 13600 டன். அதி நவீன போர்கப்பல். கப்பலில் ஏவுகணைகள் செலுத்தக் கூடிய நான்கு வழி குழாய்கள் இருக்கின்றன. கப்பல் முழுவதும் போர் ஆயுதங்கள்தான். டார்பிடோ (ஏவுகணை) அறை முழுவதும் 'பேட் கேர்ள்' என அழைக்கக் கூடிய பெராக்ஸைடு டார்பிடோக்கள். உலக நாடுகளில் போர் ஆயுதங்களைச் சுமந்துசெல்லும் மிகப் பெரிய நீர்மூழ்கிக் கப்பல்களில் குர்ஸ்க் கப்பல் முக்கியமானது. இந்தக் கப்பலின் கேப்டன் டிமிட்ரி கலஷ்னிகோவ்.

2000 ஆண்டு ஆகஸ்ட் மாதம் சம்மர் எக்ஸ் என்கிற மிகப் பெரிய போர்ப்பயிற்சியை ரஷ்யா பசிபிக் கடலில் மேற்கொள்கிறது. போர்க்கப்பல்கள், போர் விமானங்கள், ஹெலிககாப்டர்கள் என பயிற்சித் தொடங்குகிறது. அதில் குர்ஸ்க் நீர்மூழ்கி கப்பலும் ஒன்று. பயிற்சியை மேற்கொள்ள குர்ஸ்க் கடலுக்குள் பயணிக்கிறது. 118 வீரர்களுடன் பயிற்சியைத் தொடங்குகிறது. பசிபிக் கடலின் மூர்மன்ஸ்க் என்கிற இடத்தில் பயிற்சிக்காக நார்வேயிலிருந்து 160 கடல் மைல்கள் தூரத்தில் நிறுத்தப்படுகிறது. காலை 8:51 மணிக்கு இரண்டு டார்பிடோக்களை செலுத்துவதற்கு அனுமதி கேட்டு வடக்குக் கடற்படையின் போர்க்கப்பலுக்கு தகவல் அனுப்புகிறார்கள்.

அந்த போர்க்கப்பலின் பெயர் ப்யூட்ர் வெள்க்கி. ரஷ்யாவின் மிகப் பெரிய போர்க்கப்பல். அனுமதி கிடைக்கவே, டார்பிடோ அறையில் இருப்பவர்கள் குழாயில் டார்பிடோவை செலுத்துகிறார்கள். பயிற்சியில் பயன்படுத்துகிற எல்லா டார்பிடோக்களும் டம்மியானவை. ஆகஸ்ட் 12 11:29:34 நேரப்படி முதல் டார்பிடோவை செலுத்துகிறார்கள். முதல் முயற்சி வெற்றி பெற, இரண்டாவது டார்பிடோவை 11:31:48ல் செலுத்த தீர்மானிக்கிறார்கள். வெற்றியின் மிதப்பில் இரண்டாவது டார்பிடோவை முதலில் செலுத்தியதைவிட 250 மடங்கு அதிக வேகத்துடன் செலுத்துகிறார்கள். குழாயில் இருந்து டார்பிடோ வெளியேறுகிறது. வெளியேறிய டார்பிடோ வெடிப்பதை கேப்டன் உணர்கிறார். பயிற்சின் ஓர் அங்கம் என வீரர்கள் நினைக்கிறார்கள். இரண்டாவது டார்பிடோவை வெற்றிகரமாக நிகழ்த்தியதாக கடற்படை தளத்துக்கு தகவல் அனுப்புகிறார்கள்.

நேரம் மதியம் 13:30. குர்ஸ்க் பற்றிய எந்தத் தகவலும் கடலில் இருக்கிற போர் கப்பலுக்கு வராமல் இருக்க, சந்தேகத்தின் பேரில் போர்க்கப்பலில் இருக்கிற அதிகாரிகள் சம்பவ இடத்துக்கு ஒரு ஹெலிகாப்டரை அனுப்புகிறார்கள்.14:00 மணிக்கு குர்ஸ்க் எங்கும் தென்படவில்லை என ஹெலிகாப்டர் தகவல் அனுப்புகிறது. ரேடியோ, ரேடார், சோனார் என எல்லா தொழில்நுட்பங்களுக்கும் டாட்டா காட்டிவிட்டு 118 பேருடன் ஒரு மணி நேர இடைவெளியில் நீர்மூழ்கிக் கப்பல் மறைந்துவிடுகிறது. AS 34 என அதிநவீன இரண்டு சல்பர் மீட்பு வாகனங்களைக் கொண்டது. குர்ஸ்க் காணாமல் போன அன்றைய மாலை 18:00 மணி வரை தொடர்ந்த தேடுதலில் குர்ஸ்க் கப்பல் பற்றிய எந்தத் தடயங்களும் கிடைக்கவில்லை. 18:30 மணிக்கு அதி தீவிர ரோந்து விமானம் மூலம் கப்பலைத் தேடும் பணி தொடர்ந்து நடைபெறுகிறது. ஆனால், எந்த முன்னேற்றமும் இல்லை. அன்றைய இரவு 22:30 மணிக்கு ரஷ்யாவின் வடக்குக் கடற்படை அவசர நிலையை அறிவிக்கிறது. போர்ப்பயிற்சி நிறுத்தப்படுகிறது. பயிற்சியில் ஈடுபட்ட எல்லா வீரர்களும் குர்ஸ்க் கப்பலைத் தேடும் பணியில் ஈடுபடுத்தப்படுகிறார்கள்.

குர்ஸ்க் நீர்மூழ்கி கப்பல் எங்கே இருக்கிறது என்கிற எந்த விவரமும் அறிய முடியாமல் ஒட்டுமொத்த ரஷ்யப் படையும் திண்டாடிக் கொண்டிருக்கிறது. அறிவிக்கிறது. ஆனால், "கப்பலைத் தேடும் பணி தீவிரமாக நடைபெறுகிறது. உலகநாடுகளின் உதவி தேவையில்லை" என ரஷ்ய ராணுவ அமைச்சர் இகோர் செர்ஜியேவ் அறிவிக்கிறார். கப்பலின் விபத்துக்கான காரணம் கண்டறிய குழு ஒன்றை ரஷ்ய அரசு அமைக்கிறது.

ஆகஸ்ட் 13 அதிகாலை 4:50 மணிக்கு ப்யூட்ர் வெள்க்கி போர்க்கப்பல், கடலுக்கு அடியில் உயிரியல் முரண்பாடு இருப்பதை உறுதி செய்கிறது. 11:30 மணிக்கு ஞுமுளு ஒலியை வைத்து கப்பல் இருக்கிற இடத்தைக் கண்டறிவதென முடிவெடுக்கிறார்கள். மாலை 17:30 மணிக்கு AS34 மீட்பு வாகனத்தில் கடலுக்குள் பயணிக்கிறார்கள். கடலின் அழுத்தத்தால் பாதிப்படைகிற AS34 18:30 மணிக்கு போர்கப்பலுக்கு மீண்டும் திரும்புகிறது. AS 34 பழுதானதால் மீட்புப் பணிக்கு AS32 மீட்பு வாகனம் இரவு 22:40 மணிக்கு மெக்கேல் ஷ்ருடின்ஸ்க்கீ என்பவர் தலைமையில் மீண்டும் கடலுக்குள் அனுப்பப்படுகிறது. அந்தக் குழு குர்ஸ்க்கை ஞுமுளு சமிக்ஞையை வைத்துக் கண்டறிய முயல்கிறது. கடலில் உயிரியல் முரண்பாடு இருப்பதை உறுதிசெய்து ப்யூட்ர் வெள்க்கி கப்பலுக்கு அனுப்புகிறது. கப்பலைக் கண்டறிவதில் தடை ஏற்பட AS 32 திங்கள் அதிகாலை 1:00 மணிக்கு திரும்பி வருகிறது.

அடுத்த ஒருமணி நேரத்தில் ரஷ்யாவின் போர் விமானங்கள் கப்பல்கள் என குர்ஸ்க் நீர்மூழ்கிக் கப்பலைத் தேட ஆரம்பிக்கிறார்கள். உயர் அதிகாரிகளுக்கு தகவல் அனுப்பப்படுகிறது. ரஷ்ய பிரதமர் விளாடிமிர் புதின் சுற்றுலாவில் இருக்கிறார். குர்ஸ்க் காணர்மல் போனதை ரகசியமாக வைக்கிறார்கள். தேடுதல் வேட்டை தீவிரப்படுத்தப்படுகிறது. ரஷ்ய கடற்படைத் தளபதி அலெக்சேவிச் போபோவ் கப்பல் குறித்த தகவல்களை துணை அதிபருக்கு தெரியப்படுத்துகிறார். ராணுவ மந்திருக்கு தகவல் தெரிவிக்கப்படுகிறது. இருபது கப்பல்கள், 3000 வீரர்கள் என தேடல் தொடர்கிறது. குர்ஸ்க் கப்பலில் இருந்து எந்த சிக்னலும் வரவில்லை.

ரஷ்யாவின் டோஸிலெண்கோ மீட்புக் கப்பல் குர்ஸ்க் கப்பலைத் தேடும் பணியில் ஈடுபடுகிறது. இக்கப்பலில் ஆழ்கடலில் தேடுதல் வேட்டையில் ஈடுபடுகிற AS 32, கப்பல் காணாமல் போன ஒன்பது மணி நேரம் கழித்து நிலைமையின் தீவிரத்தை உணர்கிற கடற்படைத் தளபதி, கப்பல் காணாமல் போனதை உறுதிசெய்கிறார்.

அடுத்த நாள் ஆகஸ்ட் 13 ஞாயிற்றுக்கிழமை காலை. ரஷ்யா எங்கும் குர்ஸ்க் கப்பல் பற்றிய வதந்திகள் பரவ ஆரம்பிக்கின்றன. நீர்மூழ்கிக் கப்பலில் இருக்கிற வீரர்களின் உறவினர்கள் பதறுகிறார்கள். அரசு, கப்பல் பற்றிய எந்தத் தகவலையும் தெரிவிக்காமல் இருக்கிறது. எல்லோரும் கப்பல் மீண்டும் வரும் என நம்புகிறார்கள். பிரார்த்தனைகள் நாடெங்கும் நடக்கிறது.

கப்பல் காணாமல் போனதை அறிந்து அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ், ஜெர்மனி, நார்வே, நாடுகள் கப்பலைத் தேடும் பணிக்கு உதவிக்கு வருவதாக சொல்கின்றன. அமெரிக்கா, தன்னுடைய இரண்டு ஆழ்கடல் நீர்மூழ்கிக் மீட்புக் கப்பலை அனுப்புவதாக

அன்றைய தினம் அதிகாலை 4:50 மணிக்கு பீட்டர் தி கிரேட் என்கிற சோனார் ஆப்பரேட்டர் ஐந்து மணி நேர நீண்ட நெடிய போராட்டத்துக்குப் பிறகு குர்ஸ்க் கப்பல் இருக்கிற இடத்தை சோனார் உதவியுடன் கண்டறிகிறார். தேடுதலில் 'சல்வேஜ் டக்' என்கிற ரஷ்ய மீட்புக் கப்பல்

( 22 ஆம் பக்கம் பார்க்க)

# ரீடேர்ஸ் டயஸ்ற் சஞ்சிகை பற்றி...

"டிவிட் வாலஸ் ஒரு பத்திரிகை ஆசிரியர் மட்டுமல்ல ஒரு நல்ல உளவியலாளராகவும், நல்ல நிர்வாகியாகவும், திறமைமிக்க ஒரு வணிகராகவும் இருந்ததே அவர் உச்சம் தொட்டதற்குக் காரணங்களாகக் காணக்கிடக்கின்றன. பத்திரிகையில் திறமைமிக்க ஆசிரியராக மட்டும் அவர் இருந்திருந்தால் நல்ல இதழை மட்டுமே வெளிக்கொண்டு வந்திருப்பார். ஆனால் மக்கள் வரவேற்பை அதிகம் பெற்றிருக்கமாட்டார். அவர் ஒரு நல்ல உளவியலாளராக இருந்ததே மக்களுக்கு என்ன பிடிக்கும் என்று அறியவைத்தது. மக்கள் வரவேற்பை மட்டும் வைத்துக்கொண்டு அவரால் பொருள் சேர்க்க முடிந்திருக்குமா? என்றால்... இல்லை என்பதே பதிலாகலாம். இதெல்லாவற்றுடன் அவர் நல்ல வணிகராக இருந்ததனால் மட்டுமே பொருள் சேர்த்து உச்சத்தைத் தொட முடிந்தது. தனது இலக்கு நிறைவேறும் வரைக்கும் அவர் ஒரு ஆசையற்ற துறவியாகவே இருந்திருக்கிறார். அனைத்தையும் தனது முன்னேற்றத்திற்காகத் தியாகம் செய்தவர். ஏன் மனைவி லிலாவும் அவர் போலவே அவருக்கேற்றவாறு அனைத்து ஆசைகளையும் அடக்கி அவருக்குத் துணைவியாக மட்டுமல்ல உறுதுணையாகவும் இருந்திருக்கிறார். உச்சத்தைத் தொட்டதும்தான் தமக்கென வீடு, வளவு எனச் சொத்துக்களைத் தேடத் தொடங்கினர். அத்துடன் தன்னைப் பற்றியும் உலகுக்கு அறிவித்தார். அவரது அறிவித்தலைக் கண்டு பொங்கிப் பொறாமைப்பட்ட சொந்தங்கள் பற்றியும் அவர் உணர்ந்து கொண்ட தருணமும் அதுவே..."

—ஆசிரியர்

**வெற்றியால் வந்த விரோதம்.**

நீண்ட காலமாகத் தனது பத்திரிகையின் சாதனை பற்றி வெளியில் சொல்லாமலேயே இருந்துவந்த டிவிட் வாலஸ், ஃபோர்ப்ஸ் பத்திரிகைக்கு அளித்த நேர்காணலில் தமது நிலையை எடுத்துச்சொல்லி இருந்தது பலரையும் வியப்பில் ஆழ்த்தியது. " இவ்வளவு பெரிய நிலைக்கு வளர்ந்திருக்கும் இந்த மனிதர் இதைப் பற்றி நம்மிடம் ஒரு வார்த்தைகூடச் சொல்லவில்லையே" என்று மனம் புழுங்கத் தொடங்கினார்கள் அவரது உறவினர்கள். இதில் டிவிட் வாலஸின் தந்தைக்கு மிகப்பெரிய கோபம். டொக்டர் ஜேம்ஸும், டிவிட் வாலஸின் சகோதரர் பெஞ்சமினும் எவ்வளவோ பாசத்துடன் டிவிட் வாலஸுக்குக் கடிதம் எழுதிக் கொண்டிருந்தவர்கள்தான். இப்போது டிவிட் வாலஸ் வசதியானவராகி விட்டார் என்று கேட்க அவர்களுக்கே பொறுக்கவில்லை.

நாங்கள் அந்தக் காலத்தில் உனக்கு எப்படி எல்லாம் உதவியிருக்கிறோம். எப்படி எல்லாம் பண உதவி செய்திருக்கிறோம். அதை அடியோடு மறந்துவிட்டாயே. உன்னுடைய நிறுவனப் பங்குகளை எங்களுக்கு அளித்திருக்க வேண்டாமா! நன்றிகெட்டத்தனமாக நடந்து கொண்டிருக்கிறாயே. நாங்கள் செய்த உதவிகளைப் பற்றி ஒரு வார்த்தை கூடச் சொல்லவில்லையே. என்று குற்றம்சாட்டும் விதமாக அவர்கள் டிவிட் வாலஸுக்குக் கடிதம் எழுதினார்கள்.

இப்படி ஒரு கண்டனம் கிளம்பும் என்பதை டிவிட் வாலஸ் எதிர்பார்த்துத்தான் இருந்தார். தனது தந்தையையும், சகோதரரையும் அவர் ஏன் தனது நிறுவனத்தில் பங்குதாரர்களாகச் சேர்த்துக் கொள்ளவில்லை என்பதற்குச் சரியான பதிலைச் சொல்வார். அவர் தந்தை தான் ஒரு தனிப்பட்ட மேதாவி என்ற கருத்துக் கொண்டவர். மூத்த சகோதரரான பெஞ்சமின், டிவிட் வாலஸ் தனது சொற்களுக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டும் என்று எதிர்பார்க்கக்கூடும். இதனால் டிவிட் வாலஸ் அவர்களது சொற்படி தான் பத்திரிகையை நடத்தவேண்டி இருந்திருக்கும். வாசகர்களுக்கு எதைக் கொடுக்க வேண்டும் என்பதைதானே முடிவு செய்ய வேண்டுமே தவிர தனது தந்தையோ அல்லது சகோதரரோ அல்ல என்பதில் டிவிட் வாலஸ் உறுதியாகஇருந்தார். அதனால்தான் அவர்களைச் சேர்த்துக் கொள்ளவில்லை.

**மனைவி லிலா மட்டும் எப்படி?**

சொந்தத் தந்தையையும், சகோதரரையுமே தனது தொழிலில் கூட்டாளிகளாக ஏற்றுக்கொள்ளாத டிவிட் வாலஸ், லிலாவை மட்டும் எப்படிப் பங்குதாரராக வைத்துக் கொண்டார்.? லிலாவை அவருக்கு ரொம்பவும் பிடித்திருந்தது. தனக்கு ஏற்ற மனைவியாகத் திகழ்வதற்குரிய அனைத்துப் பண்புகளும் லிலாவிடம் இருந்தன எனச் சொல்வார். வேறு எந்தப் பெண்ணும் லிலாவுக்கு ஈடாக முடியாது என்பார். தன்னைப் பெரிதும் மகிழ்சியாக வைத்துக் கொண்ட மனைவி என்று பாராட்டுவார். லிலா பொறுமை இழந்ததாகச் சரித்திரம் இல்லை என்பார். தனக்கு எல்லா விதத்திலும் ஏற்ற துணைவியாக இருந்தார் என்று சொல்வார். இது வெறும் புகழ்மொழி இல்லை.

லிலா எப்பொழுதும் டிவிட் வாலஸ் படிப்பதற்கு உதவி செய்வார். அவர் எழுதிக் கொண்டிருக்கும்போது மென்மையாகப் பியானோ இசைப்பார். குடும்பத்தை அழகாகப் பராமரிப்பார். டிவிட் வாலஸின் பணிகளில் உதவுவார். நிதி நிர்வாகத்திலும் தேறியவராக இருந்தார்.



டிவிட் வாலிஸின் இல்லமும் அலுவலகமும்

ஒருபோதும் உடல்நலம் இல்லை என்று படுத்ததில்லை. டிவிட் வாலஸை அன்பாகவும், அக்கறையாகவும் பார்த்துக் கொண்டார். ஆசிரியர் குழுவில் லிலாவின் பெயருக்கு முக்கியத்துவம் கொடுத்து வெளியிடுவார் டிவிட் வாலஸ். விளம்பர ஆசிரியரின் பெயருக்கு மேலாக லிலாவின் பெயர் இடம்பெற்றிருக்கும். இருந்த போதிலும் லிலாவுக்கு ஆசிரியப் பணியில் அத்தனை பெரிய நாட்டம் இருந்ததில்லை. புதிய புதிய யோசனைகளைச் சொல்வார். கலை நயமிக்க மாறுதல்களைப் புகுத்த வழிசெய்வார்.

குதிரை லயக் கொட்டகையிலிருந்து டிவிட் வாலஸ் வெளியேறி, நல்ல அலுவலகம் அமைத்துக் கொள்ள வேண்டும் என்பதில் லிலா குறியாக இருந்தார். சொந்த வீட்டைக் கட்டும் பொறுப்பை ஏற்றுக்கொண்டு அதைத் திறம்படச் செய்து முடித்தார். 1930 களிலேயே நல்ல, பெரிய, வசதியான வசிப்பிடத்தை அமைத்துக் கொள்ள வேண்டும் என்று திட்டம் தீட்டிக் கொண்டிருந்தார். வீடு எப்படி அமைய வேண்டும். எப்படியெல்லாம் அதை அலங்கரிக்க வேண்டும் என்ற யோசனை அவருக்கு எப்போதும் இருந்துவந்தது.

பழைய அரிய கலைப் பொருட்களை வாங்கிச் சேகரித்தார். தரைவிரிப்புகளைக்கூடக் கவனமாகத் தேர்ந்தெடுத்தார். படிகம் மற்றும் வெள்ளிக் கலைப் பொருட்களை உயரிய இரசனையோடு வாங்கிச் சேர்த்தார். 1937 இல் அவர்களுடைய இரண்டாவது சொந்த வீடு உருவானது. இது 22 அறைகளைக் கொண்ட பெரும் மாளிகையாக அமைந்தது. நோர்மன் கட்டடக் கலைப்பாணியில் உருவாக்கப் பட்டது. உள்நாட்டிலேயே கிடைக்கக்கூடிய கற்களைப் பயன்படுத்தி அந்த மாளிகை எழுப்பப்பட்டது. உயரமான, கூர்மையான கோபுரத்தைக் கொண்ட கோட்டைபோல் விளங்கியது அந்த மாளிகை.

சிறிய குன்று ஒன்றின் மேல் தமது வீட்டைக் கட்டியிருந்தார் லிலா. பைரன் ஏரியைப் பார்த்தபடி அமைந்திருந்தது அது. பிளசென்ட்வில்லில் இருந்து 20 கிலோமீற்றர் வடக்கில் இந்த வசிப்பிடம் உருவாக்கப்பட்டது. ஒவ்வொரு கல்லையும் பார்த்துப் பார்த்துக் கட்டியதாகச் சொல்வார்களே... அது இந்த வீட்டிற்குத்தான் பொருந்தும். லிலா ஒவ்வொரு கட்டடப் பணிகளையும் அக்கறையாகக் கவனித்து வந்தார். ஹைய்வின்ட்ஸ் என்றுஅந்த இல்லத்திற்குப் பெயர்சூட்டி மகிழ்ந்தார்.

42 ஹெக்ரெயர் பரப்பளவில் அந்த மாளிகை அமைக்கப் பட்டிருந்தது. அங்கேயே சிறியதொரு விமானத் தளமும் உருவாக்கப்பட்டது. 4 இருக்கைகள் கொண்ட விமானம் ஒன்றையும் வாங்கினார் டிவிட் வாலஸ். இந்த விமானத்தை ஓட்டிச் செல்வதில் டிவிட் வாலஸுக்குப் பெருமிதம் அதிகம். தனது வீட்டிற்கு மேலாக விமானத்தைத் தாழப் பறக்க வைத்து லிலாவை மிரள வைப்பதில் அவருக்குப் பெரும் விருப்பம் இருந்தது. பறந்து கொண்டிருக்கும் போதே எஞ்சின் இயக்கத்தை நிறுத்தி விடுவார். விமானம் மெல்ல மெல்லச் சரிந்து தரை இறங்குவதை இரசிப்பார். அவர் ஆசை ஆசையாய் விளையாடி வந்த அந்த விமானம் 1940 இல் அவரை விட்டுப்பிரிந்தது. இதை அவராகவே அன்பளிப்புச் செய்துவிட்டார். கனடா அரசுக்கு நன்கொடையாக அதை அளித்தார். போர் நடவடிக்கைகளுக்காகப் பிரிட்டனுக்கு உதவும் விதத்தில் டிவிட் வாலஸ் இந்த நடவடிக்கையை மேற்கொண்டார்.



வாலிஸின் ஆசிரியர் பீடத்துடன் இணைந்த நூலகம்

(தொடரும்)

## தம்புவின் கள்... (06-ஆம் பக்கத் தொடர்ச்சி)

அனுமதிப்பதில்லை. வீட்டில் வைத்துக் கள்ளு விற்பதே குற்றம். அப்படியிருக்கும்போது அதைக் கூட்டம் போட்டு விற்க முடியுமா? வீட்டில் வைத்துக் கள்ளைத் தம்பு விற்கிறார் என்று சங்கத்துக்கும் தெரியும். ஆனாலும் அதை அவர்கள் கண்டும் காணாத மாதிரியே விட்டுவிட்டார்கள். ஏதோ ஒரு மரியாதையின் நிமித்தம் என்றுதான் நம்புகிறேன். ஒரு தடவை பரிசோதகர்கள் வந்து தம்பு வீட்டைச் சுற்றி வளைத்து கள்ளுச் சாடியைத் தூக்கிக் கொண்டு வந்து முற்றத்தில் வைத்திருக்கிறார்கள். தம்பு புதுப்பனை ஓலையில் பிளாவைக் கோலி எடுத்துக் கொண்டு வந்து அவர்களிடம் கொடுத்தாராம். "ஐயா, நீங்கள் வருவியள் எண்டு தனிப்பனைக் கள்ளைத் தனியாக எடுத்து வைச்சிருக்கிறன். இதைக் குடிச்சுப் பாருங்கோ, எல்லாம் விளங்கும்" என்று சொல்லிக் கொண்டு பரிசோதகர்களிடம் பிளாவை நீட்டியிருக்கிறார்.

"என்ன, எங்களுக்கே கள்ளைத் தந்து ஏமாற்றப் பாக்கிறாயா? மடையா, செய்றதையும் செய்து போட்டு பிறகு எங்களுக்குத் தண்ணி காட்டுகிறயா? பொலிஸிலதான் உன்னை அடைக்க வேணும்" என்று சற்று மிரட்டியிருக்கிறார்கள் தம்புவை. தம்பு கிறுங்கவில்லை. விரும்பினால் குடியுங்கோ. இல்லாட்டிக்கு விடுங்கோ. அதை நான் மவிசாக விற்பன்" எண்டிருக்கிறார்.

வந்த பரிசோதகர்களில் ஒருவர் நிலைமையைச் சமாளித்துக் கொண்டு தம்புவிடம் பிளாவை வாங்கினார். பத்து நிமிசத்தில் இன்னொரு பனை ஏறி அவர்களுக்கு ஒரு முட்டி கள்ளை வார்த்தார். அதுக்குப் பிறகு தம்புவின் வீட்டில் இன்னும் மூன்று வாடிக்கையாளர்கள் கூடி விட்டனர். தம்புவைப் பற்றிச் சக தொழிலாளிகளும் முறைப்பாடு செய்வதில்லை. எல்லோருக்கும் தம்புவில் ஒரு மரியாதை. "உங்களுக்காக ஒருத்தரும் விட்டுக்கொடுக்கிறேல்லை. எனக்காகத்தான் எல்லாரும் உங்களை மதிக்கிறது. மருத்துவிச்சி கோவிப்பா எண்டு நினைச்சுக் கொண்டு, உங்கட கூத்துகளையெல்லாம் சனம் கண்டும் காணாமல் விடுதுகள். இதை விளங்காமப் பெருமை கிளப்பாதேங்கோ..." என்று பசுபதி தம்புவின் உச்சியில் ஒரு போடு போடுவா.

"போடி போடி... நீயும் உன்ரை கதையும்... அண்டைக்கு வந்த கள்ளு பிடிகாரரையே என்ரை கள்ளுத் தானேடி மடக்கினது. இதை நீ பாத்தனியல்லோ... பிறகென்ன புலுடாகக் கதைக்கிறாய்... நீ ஊரில இருக்கிற பெண்டுகளின்ரை கவட்டைப் பாக்கிற மாதிரி இதை நினைக்காத கண்டியோ... " தம்புவுக்குச் சுயமரியாதை கொஞ்சம் கூட. அதுக்காக இந்த மாதிரிச் சந்தர்ப்பங்களில் எல்லை தாண்டிய சொற்கள் எல்லாம் வரும்.

"என்ர சிவனே... ! "நான் ஒவ்வொரு பிள்ளையையும் ஆசையாகப் பூக்குஞ்சுகளைப்போலயல்லோ தூக்கிக் கொஞ்சுகிறனான். இதைப்போய் இந்த மனுசன் நாறின வாயால ஏதோ மாதிரியெல்லோ புசத்துது.... காளியம்மா..." என்று சொல்லிக் கொண்டு பசுபதி எழும்பிப் போயிடுவா. எல்லாம் ஒரு பொழுதுக்குள்தான். அடுத்த பொழுதுக்குள் எல்லாமே மறந்து சகஜ நிலைக்குத் திரும்பி விடும். பிறகு பசுபதி தம்புவின் மடியில் கிளியாகி விடுவா.

தம்புவிடம் எல்லோரும் கள்ளுக்காகப் போனார்கள். பசுபதியிடம் பேறு பார்க்கவென அழைக்கப் போனார்கள். ஐயா போனது புத்தகங்களுக்காக. பெரிய எழுத்து விக்கிரமாதித்தன், பட்டி கதைகள், ஆயிரம் தலை வாங்கிய அபுர்வ சிந்தாமணி, வால்மீகி ராமாயணம், பெரிய எழுத்து மகா பாரதம், பெரிய எழுத்துக் கந்தபுராணம், மதனகாமராசன் கதைகள், கண்ணகி புராணம், தெனாலிராமன் கதைகள், நாலாயிரம் திவ்விய பரபந்தம், சீவக சிந்தாமணி, வில்லிபுத்தூரர் ராமாயணம், திரௌபதி கதை என்று ஏராளம் புத்தகங்கள் அவரிடமிருந்தன. ஐயாவிடமும் நிறையப் புத்தகங்களிருந்தன. இரண்டு பேரும் ஆளுக்காள் கொடுத்து மாறிக் கொள்வதுண்டு. ஐயாவைப் பார்த்து பிறகு ஆளாளுக்கு தம்புவிடம் புத்தகங்களை வாங்கிப் படிக்கத் தொடங்கினார்கள்.

நானும் கூடத்தான் பின்னாளில் தம்பப்பாவின் புத்தகங்களை வாங்கத் தொடங்கினேன். பெரிய கள்ளிப் பெட்டியொன்றில் வரிசை கட்டி அடுக்கப்பட்டிருந்த புத்தகங்களில் ஒன்று "தம்புரான் கள்ளு" என்றிருந்தது. "என்ன, உங்களைப் பற்றிய புத்தகமா இது? என்று கேட்டேன். "அது மலையாளத்துக் கதை. கேரளாவில் கள்ளுக்குத் தனி மவிசாம். அதைப் பற்றின கதை. திருப்பதியப்பனைப் பாக்கப் போனபோது வாங்கினான்" என்றார். அந்தப் புத்தகத்தை வாங்கிக் கொண்டு வந்தபோது பார்த்தேன், தம்பப்பா அந்தப் புத்தகத்தோடு அறுபத்தாறு பக்கத்திலே ஒரு சிறிய காவியத்தை எழுதி வைத்திருந்தார். அது "கேரள டயறீஸா?" "தம்பு காவியமா?" என்று யோசிக்கிறேன் இப்போது.



## கலியுக தெய்வம்... (11-ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால், ஷாமாவின் தாயாருக்கு இறக்கும் தருவாயில் தனது வேண்டுதல் நினைவுக்கு வந்தது. ஷாமாவிடம் குலதெய்வத்தைச் சென்று வணங்க வேண்டும் என்ற சத்தியத்தைப் பெற்ற பின்னரே ஷாமாவுடைய தாயாரின் உயிர் பிரிந்தது.

ஆனால், நாளடைவில் ஷாமா அந்த சத்தியத்தை மறந்தார். இதை நினைவுகூர்ந்த ஜோதிடர் அந்த சத்தியத்தை நிறைவேற்றினால் அவரின் குடும்பக் கஷ்டங்கள் அனைத்தும் விலகும் என்று கூறினார். பாபாவின் ஷரூபத்திலேயே தனது குலதெய்வமான சப்தசிருங்கி தேவியை தரிசித்த ஷாமா நேராக பாபாவிடம் சென்றார். பாபாவை தன் குலதெய்வம் என்று எண்ணி வழிபடச் சென்ற அவரிடம், வாணி என்ற கிராமத்தில் இருக்கும் ஷாமாவின் குலதெய்வமாக விளங்கும் சப்தசிருங்கியை சென்று வழிபடுமாறு கூறினார். அதாவது அந்தச் செயலின் மூலம் பாபா தன் பக்தரான காகாஜியைத் தன்னிடம் அழைத்து வரவும் எண்ணினார்.


ஷாமா வாணி கிராமத்திற்கு வந்து தன் குலதெய்வமான சப்தசிருங்கியை வணங்கினார். அவர் ஷீரடியிலிருந்து வந்திருக்கிறார் என்பதை அறிந்த காகாஜிக்கு மகிழ்ச்சி உண்டாயிற்று. அவர் தனக்கு பாபாவை தரிசிக்க வேண்டும் என்றும், தன்னையும் அவருடன் அழைத்துச் செல்லுமாறும் கேட்டார். ஷாமாவும் அவரைத் தன்னுடன் ஷீரடிக்கு அழைத்துச் சென்றார். காகாஜி பாபாவை தரிசித்த அந்த கணமே அவரது மனமானது அமைதியைப் பெற்றது. ஆச்சர்யத்தின் உச்சமாக காகாஜி பாபாவிடம் தன்னுடைய பிரச்சினைகள் பற்றி எதுவும் கூறவில்லை. அதேபோல் பாபாவும் அவரிடம் ஒரு வார்த்தையும் பேசவில்லை. அவரைக் கண்ட மாத்திரத்திலேயே அவரின் மனதில் இருந்த வேதனைகள் நீங்கி, அவரது மனமானது அமைதியடைந்தது.

**பாபாவின் உத்தரவே தாரகமந்திரம்!**

ஷீரடிக்கு யார் வர வேண்டும் என்றாலும், இல்லை யார் ஷீரடியிலிருந்து கிளம்ப வேண்டும் என்றாலும் சரி பாபாவின் அனுமதி இருந்தாலே அது நிகழும். அவ்வாறு இமாம்பாய் என்ற ஒரு பாபாவின் அடியவர், தன் ஊருக்குக் கிளம்புவதற்கு ஆயத்தமாகி பாபாவிடம் விடை பெறச் சென்றார். ஆனால், பாபா அவரை அப்போது ஊருக்குப் போக வேண்டாம் என்றும், நிலைமை சரியில்லை என்றும் கூறினார். இமாம்பாய் தன் வீட்டிற்கு போகும் அவசரத்திலும் ஆர்வத்திலும் பாபாவின் வார்த்தையை மீறிப் புறப்பட்டார். மேலும் அவர் கால்நடையாக செல்லலாம் என்றும் தீர்மானித்தார்.

ஷீரடியில் இருந்து பன்னிரண்டு மைல் தொலைவு வரை எந்தவோர் இடைஞ்சலுமின்றி அவர் கடந்தார். சூரியன் அஸ்தமிக்கும் நேரத்தில் அவர் சுராலா என்ற நதிக்கரையில் நடந்து சென்றார். அப்போது வானிலை மோசமாக இருந்தபடியால் அங்கிருந்த ஓர் அதிகாரி அவரை மேலும் பயணத்தைத் தொடர வேண்டாம் என்று எச்சரித்தார். இன்னும் நான்கு மைல் மட்டுமே எஞ்சியிருப்பதால், அவர்தான் செல்வதாகக் கூறிச் சென்றார். அவர் மூன்று மைல் தொலைவு சென்றதும், பலத்த காற்று வீசத் தொடங்கியது. இடியுடன் பெருமழை பெய்தது. ஆற்றில் வெள்ளம் கரைபுரண்டு ஓடியது. இதனால் கலக்கமுற்ற இமாம்பாய் சாயிநாதரை அழைத்தார். அப்போது வானில் ஒரு மின்னல் கீற்று வந்தது. அந்த ஒளியில் சாயிநாதரை தரிசித்தவர், சாயியைப் பணிந்து வணங்கியபடி அந்த நதியைக் கடந்து சென்றார். அவர் நதியைக் கடக்கும் வரையில் தண்ணீர் அவரின் முழங்கால் அளவே இருந்தது. மறு கரைக்குச் சென்றதும் அவர் திரும்பி ஆற்றினை நோக்கும்போது அதில் வெள்ளம் கரைபுரண்டு ஓடுவதைக் கண்டார். பாபாவின் அருளால்தான் தன்னால் ஆற்றினைக் கடக்க முடிந்தது என்பதை அறிந்து அங்கேயே பாபாவுக்கு மனதார நன்றி கூறினார்.

சாயிநாதர் அன்னைக்கு நிகரானவர் ஆவார். ஒரு தாய் எவ்வாறு தன் குழந்தைக்கு ஆபத்து என்று தெரிந்த கணத்தில் ஓடிச்சென்று காக்கின்றாளோ, அவ்வாறே சாய்நாதர் தன் பக்தர்களுக்கு எந்தப் பிரச்சினை என்றாலும் ஓடிச்சென்று அவர்களைக் காப்பார். எனவே ஸ்ரீசாயிநாதரை வணங்கி இந்த நாளில் அவரின் அருளைப் பெறுவோம்





# நடக்கப் போகிறார் நடராஜா

நவீன நகைச்சுவைத் தொடர் 17

— உமா சந்தோஷ் —

நடா மெல்ல எழுந்துபோய் தனது
மனைவி படுத்திருந்த அறைக்குள்
எட்டிப் பார்த்தார். சுவரைப்
பார்த்தபடி தனக்குள் கதைத்துக்
கொண்டு கிடந்தஅவருக்கு, நடா
அறைக்குள் வந்தது தெரியவில்லை.
பெட் சீற்றால் போர்த்துக் கொண்டு
தலையை மட்டும் வெளியே
தெரியும்படி கிடந்தவளைப் பார்த்து
நடா பயந்து போனார். 'நிமோனியா
காய்ச்சலோ தெரியாது! அதுதான்
காய்ச்சல் கூடிப் புசத்திறாள் போல
கிடக்கு. எதுக்கும் சகோதரியிட்டைச்
சொல்லுவம்" என்று எண்ணியவாறு
மெல்ல வெளியே வந்தார். டொக்டர்
மச்சாள் இருந்த அறைக்குப் போனார்.

காதுக்குள்ளை இயர் போனைப்
போட்டுப் பாட்டுக் கேட்டுக்
கொண்டு படுத்திருந்த டொக்டர்
மச்சாளுக்கு நடா அறைக்குள் வந்த
சத்தம் கேட்கவில்லை. அவள் காலை
மெல்லச் சுறண்டினார் நடா. "என்ரை
ஐயோ" டொக்டர் மச்சாள் பயந்து
கத்தின சத்தத்தைக் கேட்டு வேலைக்
காரியும், நடாவின் மனைவியும் அந்த
அறைக்கு வந்தனர். 'அது ஒண்டும்
இல்லை. அத்தானைக் கண்டு
பயந்திட்டன்' தன்னைச் சுதாகரித்துக்
கொண்டாள் டொக்டர் மச்சாள்.

'உனக்கொண்டும் இல்லையே?'
தனது மனைவியைப் பார்த்துக்
கேட்டார் நடா. 'எனக்கொண்டும்
இல்லை. எல்லாம் உங்களாலை தான்"
என்று சொல்லியபடி மீண்டும்
அறைக்குத் திரும்பினாள். 'என்ன
பாத்துக் கொண்டு நிக்கிறாய்? நீயும்
போவன்' நடா வேலைக்காரியைப்
பார்த்துச் சொன்னார். ஒருவரும்
அறைக்குள் இல்லை என்று கண்டதும்
"ஏன் என்ரை காலைத் தொட்டனியள்
அத்தான்" மெதுவாகக் கேட்டாள்.
டொக்டர் மச்சாள். 'விசரி. சீனைப்
பெருப்பிக்கப் பாத்திட்டாய்.
நீ கத்தின சத்தம் சந்தி வரை
கேட்டிருக்கும். நல்ல காலம் அவன்
லோயர் வீட்டிலை இல்லை.
இருந்திருந்தால் தன்ரை மனுசியை
நான் றேப் பண்ண முயற்சித்தனான்
எண்டு கேஸைப் போட்டுத்
துலைச்சிருப்பான்." என்ற நடா ஒரு
நமட்டுச் சிரிப்பொன்றோடு
டொக்டர் மச்சாளைப் பார்த்தார்.

'அதுக்கு நான் விட்டிடுவனே,
என்ன? இனிச் சொல்லுங்கோ. ஏன்
காலைக் கிள்ளினீங்கள் அத்தான்"
என்று அவள் கேட்க அவளின்
கன்னத்தைச் செல்லமாகக்
கிள்ளிவிட்டார் நடா. யாராவது
பார்க்கிறார்களா என்று அக்கம் பக்கம்
தலையை திருப்பினார் நடா.
வேலைக்காரி மட்டும் தூரத்திலை
நின்று கண்கொட்டாமல் இந்த
சீனைக் கண்டு களிப்பதை அவர்
கண்டுவிட்டார். நடாவின் இதயம்
சட்டென உறைந்துபோன மாதிரி
ஒரு தோற்றப்பாட்டுடன் கண்களை
மூடிக் கொண்டார். முதல் நாள் சீன்
கண்ணுக்குள் வந்தது.

ஏனெனில் முந்தைய தினம் கூழைக்
குடித்துவிட்டு 'நல்லா இருக்கு" என்று
இப்படித்தான் வேலைக்காரியின்
கன்னத்தையும் கிள்ளியவர் நடா.
இதை எதிர்பார்த்திராத வேலைக்காரி
சட்டென அவர் கையைத் தட்ட
அவள் கையிலை இருந்த கூழ்
கொஞ்சம் அவள் சட்டையை
நனைத்துக் கொண்டது. அங்கே வந்த
டொக்டர் மச்சாள் 'உனக்குக்
கொட்டிச் சிந்தாமல் ஒரு வேலையும்
செய்யேலாது, என்ன?' எனக் கேட்க,
'அது என்ரை கை தவறிக் கொட்டிப்
போச்சுது" என்று வலிந்து கட்டிக்
கொண்டு பிழையைத் தனது தலையில்
போட்டு வேலைக்காரியைக் காப்பாற்
றினார். வேலைக்காரி ஒரு வித நன்றி
யோடும் நாணத்தோடும் அவரைப்
பார்த்தார். எனவே நடாவின் கவலை
எல்லாம் இதுவரை தன்னை மட்டும்
கிள்ளியவர் நடா என்று நினைத்து
ஒரு காமக் களையோடு நடமாடிய
வேலைக்காரியின் எண்ணத்தைக் இந்த
சீன் களைத்துவிடுமோ என்பது தான்.

'அத்தான் என்ன கனவிலை
நிக்கிறியளோ?' டொக்டர் மச்சாள்
கேட்டார். அப்போதுதான் அதுவரை
அவள் கன்னத்திலிருந்து தான் தனது
கைவிரலை எடுக்காதது நடாவுக்குத்
தெரிந்தது.

மீண்டும் ரெலிபோன் மணி
அடித்தது. டொக்டர் மச்சாள்தான்
எடுத்தார். 'ஹலோ..நான் மார்க்
பேசுறன். மிஸிஸ் நடா இருக்கிறாவா?"
ஒரு கம்பீரமான ஆணின் குரல் அந்தப்
பக்கத்திலே கேட்டது. 'ஓம். நிக்கிறா.
நீங்கள் யாரெண்டு சொல்ல?"
டொக்டர் மச்சாள் கேட்டார்.
'அவவின்ரை ஸ்கூல் பிரண்ட் மார்க்
எண்டு சொல்லுங்கோ' என்றார் அவர்.
டொக்டர் மச்சாள் தனது
சகோதரியைக் கூப்பிடுவதற்காக
அவள் படுத்திருந்த அறைக்குப்
போனார். இதை எல்லாம் கவனித்துக்
கொண்டிருந்த நடா ஓடி வந்து
ரெலிபோன் றிசீவரை எடுத்தார்.
'ஹலோ நான் நடா பேசுறன்.
நீங்கள்..?' என்றார். 'ஹலோ...ஹாய்
நடா. நான் மார்க் அதாவது உங்கடை
வைய்பின்ரை ஸ்கூல் பிறன்ட்
பேசுறன். போன கிழமைதான்
யூ.எஸ் .ஏ. லை இருந்து வந்தனான்.
அவ இங்கை நிக்கிறதாக் கேள்விப்
பட்டன். ஒருக்காப் பாத்திட்டுப்
போவம் எண்டுதான் அடிச்சனான்.
அதோடை நாளைக்கு என்ரை
வீட்டிலை பழைய பிரண்ட்ஸ்
எல்லாரையும் கூப்பிடிறன். அதுதான்
அவவையும் கூப்பிடலாம் என்று
எடுத்தனான். நீங்களும் நிக்கிறது
தெரியாது. இப் யூ டோன்ட் மைன்ட்
நீங்களும் வரலாம். தெரியாதே
எல்லாரும் பிரண்ட்ஸ் என்றபடியால்
என்ன கொஞ்சம் அட்ஜெஸ் பண்ண
வேண்டி வரும். அப்ப வாறியளே?'
இதைக் கேட்ட நடாவுக்கு அவரின்
காதுக்குள் ஈயம் காய்ச்சிக்
கொதிக்க கொதிக்க ஆரோ
ஊத்துவதாகத் இருந்தது.

'அது எனக்கு வந்த கோல்" என்று
ரெலிபோன் றிசிவரைப் பிடுங்கினாள்
அவர் மனைவி. பின்பு நீண்ட நேரம்
அவள் பேசிக்கொண்டிருந்ததைக்
கண்வெட்டாது பார்த்துக்
கொண்டிருந்த நடாவுக்கு விசராக
இருந்தது. தனது மனைவி குழைஞ்சு
குழைஞ்சு பேசுவதைப் பார்த்துக்
கொண்டிருந்தார் அவர். வார்த்தைக்கு
வார்த்தை மார்க்... மார்க் என்று நுனி
நாக்கால் அவனை விழித்து விழித்து
பேசுவதைப் பார்க்க நடாவுக்கு
சகிக்கவில்லை. 'நாயே...! உன்னைத்
திருப்திப்படுத்த எண்டு எத்தினை
ஆயிரம் நான் வயகராவுக்குச் செலவு
செய்திருப்பன். நீயும் காணும்...
காணும் எண்டு சொல்லச் சொல்ல
எல்லாஞ் செய்தனான். இப்ப உனக்கு
மார்க் இனிக்குது...என்ன?.
இண்டைக்கு விளையாட்டைக்
காட்டிறன் பொறு..!' என்று
மனதுக்குள் கறுவிக் கொண்டார்.

தனது அறைக்குள் போனார்.
சாத்திவிட்டு மருந்துப் பெட்டியை
எடுத்தார். அதனுள் வயகராப்
போத்தலைத் தேடி எடுத்தார். பல
ஆயிரம் செலவு செய்து அமெரிக்கா
விலை இருந்து கொண்டு வந்தது.
இதனால் பலபேருக்கு உதவினார்
நடா. பல குடும்பங்களைத்
திருப்திப்படுத்தியும் இருக்கிறார்.
திருப்திப்படுத்த உதவியும்
இருக்கிறார்.

(தொடரும்)

## அந்த நண்பன்...

(21ஆம் பக்கத் தொடர்ச்சி)

தங்களுடைய சுய தேவையை
குறைத்துக் கொண்டு வாயை கட்டி,
வயிற்றைக் கட்டி பிள்ளைகளை
படிக்க வைத்த எத்தனை பெற்றோர்
கள் பிள்ளைகளின் பராமரிப்பு இன்றி
இப்போது மனதுக்குள் புலம்பிக்
கொண்டிருக்கிறார்கள்? இங்கே
இப்பிரச்சினைகளை யார் தான்
தீர்ப்பது?


மனம் இருந்தால் புளியமரத்தின்
இலையில் கூட இருவர் அமரலாம்.
ஆனால் அது மனதுக்குத்தான் நாம்
எங்கே போவது? வயோதிப
பெற்றோரை பாரமென நினைக்கும்
ஒரு தலைமுறை மலர்ந்து விட்டது.
இந்த சூழலில் இதே போக்கு
தொடருமானால் இது கடும்
விளைவுகளை எதிர்காலத்தில்
விதைக்கக் கூடும். இதற்கு என்ன
செய்ய வேண்டும்? அன்பும், மனித
நேயமும் குடும்பங்களில்
விதைக்கப்பட வேண்டும். "நான்
முதல்வரானால்... நான் குடியரசுத்
தலைவரானால்" என பள்ளிகளில்
நடக்கும் போட்டி தலைப்புகளை
சிறிது மாற்றி வையுங்கள். நான்
முதியவரானால்!.நான் பெற்றோர்
ஆகும் போது... என் தாத்தா, என்
பாட்டி...! என உறவுகளை ஆரம்பக்
கல்வியில் இருந்தே விதையுங்கள்.

மனிதநேயம் மலர்வதற்கு முதலில்
நம் இல்லங்கள் தயாராக வேண்டும்.
"பாடசாலைகளில் ஆசிரியர்கள்
பெற்றோர், ஆனால் வீட்டில்
பெற்றோர் தான் ஆசிரியர்"
ஒழுக்கக்கூற்றை பாடசாலைக்கும் ஒரு
படி மேலாக, போதிக்க வேண்டிய
இடம் இல்லம். வயோதிகர்களால்
அது முடியும். நீங்கள் வயோதிகத்தை
ஒதுக்கி, எதிர்காலத் தலைமுறையான
உங்களின் பிள்ளைகளுக்கும் அதை
கடத்தாதீர்கள். ஏன் என்றால்
இப்போது அவர்கள் நெஞ்சில்
விதைக்கப்படுவதை நாளை நீங்கள்
தான் அறுவடை செய்யப்
போகிறீர்கள். அப்போதும் உங்களை
குழந்தையாய் எண்ணியே,
துடிக்கிறது இந்தப் பெற்றோரின்
மனது...

## பறவை

நீண்ட நேரமாக
இடைஞ்சலாக இருந்த
அந்தப் பறவையை
என் ஜன்னலில் இருந்து
விரட்டி விட்டு விட்டேன்..
ம்ம்..
இப்போதும்
இடைஞ்சலாகத்தான்
இருக்கிறது.

- கிருத்திகா தாஸ்



# புதுவிதி நடத்தும்

PUTHU VITHI

# பரிசு மழை போட்டி - 01 -

**1ம் பரிசு ரூ100,000/=**

**2ம் பரிசு ரூ60,000/=**

**3ம் பரிசு ரூ25,000/=**

**இத்துடன் ரூ2000/= பெறுமதியான 10 ஆறுதல் பரிசுகள்**

வாசகர்கள் தங்கள் அறிவையும், அதிர்ஷ்டத்தையும் பரீட்சித்துப் பார்க்க ஓர் அரிய சந்தர்ப்பம்

**மேற்படி போட்டிகள் மூன்று சுற்றுக்களாக கீழே குறிப்பிடப்பட்டுள்ள கால அட்டவணையின்படி நடைபெறும்.**

புதுவிதி PUTHU VITHI பரிசு மழை

## முதலாம் சுற்று

- முதலாம் சுற்றின் முதலாம் பரிசுக்குரிய வினாக்கள் பிரசுரமாகும் திகதி **28.10.2017**
- முதலாம் சுற்றின் இரண்டாம் பரிசுக்குரிய வினாக்கள் பிரசுரமாகும் திகதி **04.11.2017**
- முதலாம் சுற்றின் மூன்றாம் பரிசுக்குரிய வினாக்கள் பிரசுரமாகும் திகதி **11.11.2017**
- முதலாம் சுற்றின் ஆறுதல் பரிசுக்குரிய 10 வினாக்கள் பிரசுரமாகும் திகதி **18.11.2017**

## இரண்டாம் சுற்று

- இரண்டாம் சுற்றின் முதலாம் பரிசுக்குரிய வினாக்கள் பிரசுரமாகும் திகதி **25.11.2017**
- இரண்டாம் சுற்றின் இரண்டாம் பரிசுக்குரிய வினாக்கள் பிரசுரமாகும் திகதி **02.12.2017**
- இரண்டாம் சுற்றின் மூன்றாம் பரிசுக்குரிய வினாக்கள் பிரசுரமாகும் திகதி **09.12.2017**
- இரண்டாம் சுற்றின் ஆறுதல் பரிசுக்குரிய வினாக்களும், இறுதிச்சுற்றில் முதலாம் பரிசுக்குரிய போட்டியில் பங்குகொள்ள தகுதியானவர்களின் பெயர்களும் பிரசுரமாகும் திகதி **16.12.2017**

## இறுதிச் சுற்று

- இறுதிச் சுற்றின் முதலாம் பரிசுக்குரிய வினாக்களும், இறுதிச் சுற்றின் இரண்டாம் பரிசுக்குரிய போட்டியில் பங்குகொள்ள தகுதியானவர்களின் பெயர்களும் பிரசுரமாகும் திகதி **23.12.2017**
- இறுதிச் சுற்றின் இரண்டாம் பரிசுக்குரிய வினாக்களும், இறுதிச் சுற்றின் மூன்றாம் பரிசுக்குரிய போட்டியில் பங்குகொள்ள தகுதியானவர்களின் பெயர்களும் பிரசுரமாகும் திகதி **30.12.2017**
- இறுதிச் சுற்றின் மூன்றாம் பரிசுக்குரிய வினாக்களும், இறுதிச் சுற்றில் ஆறுதல் பரிசுக்குரிய போட்டியில் பங்குகொள்ள தகுதியானவர்களின் பெயர்களும் பிரசுரமாகும் திகதி **06.01.2018**
- இறுதிச் சுற்றின் ஆறுதல் பரிசுக்குரிய வினாக்கள் வினாக்கள் பிரசுரமாகும் திகதி **13.01.2018**

- சகல போட்டிகளிலும் இறுதிச்சுற்றில் பங்குபற்றி குலுக்களுக்கு தகுதிபெற்றவர்களின் பெயர்கள் பிரசுரமாகும் திகதி **20,27.01.2018**

**குலுக்கல் இடம்பெற்று பரிசுகள் வழங்கப்படும் திகதி 15.01.2018**



**நியந்தனைகள்:-**

- ✓ ஒருவர் ஒரு போட்டியில் ஒரு முறைதான் பங்குபற்றலாம்
- ✓ எமது பத்திரிகையில் பிரசுரமாகும் போட்டிக் கூப்பனையே நிரப்பி அனுப்ப வேண்டும். போட்டியாளர்கள் தாமே தயாரித்து அனுப்புவதை தவிர்க்க வேண்டும்.
- ✓ போட்டியாளர்கள் விண்ணப்பத்தில் தாம் குறிப்பிட்ட ஆள்அடையாள விவரத்தை அவர்கள் பரிசிலுக்கு தகுதி பெறும் பட்சத்தில் நேரடியாக சமர்ப்பித்து உறுதிப்படுத்த வேண்டும். இல்லையெனில் பரிசில் பெறும் வாய்ப்பை தவற விட்டவராவார்.
- ✓ எமது பத்திரிகை நிறுவனத்தைச் சார்ந்தவர்களோ அல்லது அவர்களது உறவினர்களோ இப் போட்டியில் பங்குகொள்ள முடியாது.



# அந்த நண்பன் இப்போது முதியோர் இல்லத்தில்...

**ஒக்ரோபர் 01, சர்வதேச சிறுவர், முதியோர் தினமாகும். அதனையொட்டி இந்தக் கட்டுரை பிரசுரமாகிறது.**

நேற்று வரை என்னோடு நடைப் பயிற்சிக்கு வந்த நண்பர் இன்று என்னுடன் நடக்க வரவில்லை. அவருக்கு வயது 70ஐ கடந்து விட்டதாக நடைப் பயணத்தில் அவரே, அடிக்கடி சொன்னதாக நினைவு. 'இனி நடக்க வர மாட்டேன்," என என்னிடம் ஏன் சொல்லவில்லை? என்ற கேள்வி ஆழ் மனதில் வருடியதில் கிடைத்த விடை, அது அந்த நண்பருக்கே தெரியாத ரகசியமாய் இருந்துள்ளது. ஆம்... அந்த நண்பர் இப்போது முதியோர் இல்லத்தில் சேர்க்கப்பட்டு விட்டான்.

ஏன் எங்களுடன் படித்த இன்னொரு நண்பரான பரந்தாமன் அரச பணியில் வேலை செய்தவன். மாதம் பிறந்தால் பதினான்காயிரத்து சொச்சம் ரூபா பென்சன் வந்து விடும் என பெருமை பட்டுக் கொள்வான். இப்போது அவனையும் கூட அவனது மகனும், மருமகளும் பராமரிக்காமல் முதியோர் இல்லத்தில்தான் விட்டுள்ளார்கள். இருவரும் இலட்சம் ரூபா மாத சம்பளத்தில் பிரபல நிறுவனத்தில் வேலை. இந்த நிஜ வேரை பிடுங்கி எறிந்து விட்டனர். பரந்தாமனின் மனைவி, இவன் மகனது சிறு பிராயத்திலேயே இறந்து விட்டாள். இரண்டாவது திருமணம் செய்து கொள்ளாமல், அதிகாலையில் எழுந்து சமைந்து, மகனை கிளப்பி, மாலையில் வீடு திரும்பி, மீண்டும் பணி செய்து... யப்பா... அவன் வாழ்க்கையில் மகன் வளர்ந்த பின்புதான் இளைப்பாறத் தொடங்கினான்.

'பேரக் குழந்தை வளரும் வரை மீண்டும் பரந்தாமனின் தேவை இவர்களுக்கு இருந்தது. கணவனும், மனைவியுமாக பணிக்கு சென்று விட, குழந்தையை பார்த்துக் கொண்டான் பரந்தாமன். இப்போது இருவரது வாழ்விலும் மாற்றம். பரந்தாமனின் பேரனுக்கு பிளே ஸ்கூல். பரந்தாமனுக்கு முதியோர் இல்லம். ஆனால் இதையெல்லாம் நினைத்து பரந்தாமனும் தீரா கவலையில் பீடித்ததாகத் தெரிய வில்லை. கடந்த வாரம் அவன் இருக்கும் முதியோர் இல்லத்துக்கு சென்றிருந்தேன். வழக்கமான அதே புராணத்தை எடுத்தான். எனக்கு ஒன்னும் கவலை இல்லை கேட்டியாடே! பதினான்காயிரத்து சொச்சம் பென்சன் வருது. 'அதான் எனக்குத் தெரியுமே..." என்றேன்.

'அது இல்லடே, இங்க மாசம் 7 ஆயிரம் கட்டணும். பென்சன் காசைக் கொண்டு கட்டிடுவேன். இங்க மூணு நேரமும் நேரத்துக்கு சாப்பாடு வந்துடும். என்னைப் போல இங்க 30, 40 பேர் இருக்காங்க. பொதுவா ஒரு பெரிய ரீ.வி இருக்கு. வீட்டைப் போலவே சீரியல் பார்த்துப்பேன். இது போக தீபாவளி, பொங்கல், கிறிஸ்துமஸ், ரம்ழான்னு நல்ல நாளு, பெரிய நாளுக்கு பள்ளிக்கூடப் பிள்ளைக ளெல்லாம் எங்களோட வந்து கொண்டாடுவாங்க. அது ஒரு வகையில குடும்பத்தோடவே இருப்பதைப் போல் தோற்றத்தை தருது..."பட, படவென ஆறுதலுக்கு சொன்னாலும், பரந்தாமனின் கண்களில் கண்ணீர் கசிந்ததையும் பார்க்கத்தான் முடிந்தது.

பரந்தாமனுக்கு பென்சன் இருப்பதனால் 7 ஆயிரம் ரூபா கட்டிப் பார்த்துக் கொள்ளும் அளவுக்கு ஒரு இல்லம் கிடைத்தது. அதுவும் அவர் மகன், இவரது ஓய்வூதியத்தில் இருந்தே கொடுக்கும் படி ஏற்பாடு செய்திருந்தான். ஆனால் அந்த நிலையும் இல்லாமல் எத்தனை, எத்தனை வயோதிபர்கள் இலவச இல்லங்களில் கொண்டு சென்று விடப்பட்டுள்ளனர்.
இவ்வளவு ஏன் சுற்றுலாத் தலங்களுக் கும், ஆன்மீகத் தலங்களுக்கும் அழைத்து செல்லப்பட்டு தொலைத்து வரபட்ட வயோதிப பெற்றோர்கள் எத்தனை பேர்? இப்போதெல்லம் வீதியில் அப்படி யாரும் எதிர்கொண்டால் நின்று, நிதானித்து, ஒருவேளை உணவாகினும் வாங்கிக் கொடுத்து நகர்வதை பழக்கப்படுத்திக் கொண்டாயிற்று.

ஆம்... கண்ணாடியில் முகம் பார்க்கிற பொழுது தலை முழுவதும் இருக்கின்ற நரை முடிகள் வாழ்வியல் பயத்தை கற்றுக் கொடுக்கிறது. இத்தனை சிக்கல்களுக்கும் காரணம் என்ன? மனித நேயம் அறவே வற்றி போவதுதான். அடிப்படைக் கல்வியி லேயே மனித நேயம் போதிக்கப்பட வேண்டும். ஒவ்வொரு ஆசிரியர்களும், அவர், அவர்கள் பாடத்தை கற்பிக்கின்றார்களே தவிர, அன்பை, அறத்தை, நல்லொழுக்கத்தை, மனித நேயப் பண்பை மாணவன் எங்கிருந்து கற்றுக் கொள்ளப் போகிறான்? ஐந்தில் வளையாதது, ஐம்பதில் வளையாது என்பது பழமொழி. ஆம்... குழந்தையின் சிறுபிராயத்தில் அதன் கண் எதிரே, நம் பெற்றோரை நாம் நடத்தும் விதம் அதன் ஆழ் மனதில் பதியும். நாம் நம் பெற்றோரை இன்று பாரமாக நினைத்தால், எதிர்காலத்தில் அவர்கள் நம்மையும் பாரமாகத்தான் பார்ப்பார்கள்.

குடும்பமாக அமர்ந்து சாப்பிடு வதைக் கூட இப்போதெல்லாம் காண முடிவதில்லை. ஒவ்வொரு வரும் ஒவ்வொரு நேரத்தில் சாப்பிடு வதும், தொலைக்காட்சிப் பெட்டி களின் சத்தத்துக்குள்ளும், ஒளிப்படக் காட்சிக்குள்ளும் மூழ்கிப் போய் ஆகாரத்தை தொலைப்பவர்களைக் காண்கிறோம். ஒரு வீட்டில் வயதான பெரியவர்கள் இருப்பது, நம்மிடம் 50 ஆண்டு அனுபவம் இருப்பதற்கு சமம். ஆனால் வயதானவர்களை பாரமாக எண்ணும் போக்கு, இன்றைய சூழலில் நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாக அதிகரிப்பதைக் காண முடிகிறது.

இதே நிலை நீடிக்குமேயானால் மூலைக்கு ஒரு முதியோர் இல்லமும், அடிக்கு ஒரு அநாதை இல்லமும் மலரும் காலமும் வெகு தொலைவில் இல்லை. இந்த உலகில் பிறந்த அனைவருக்கும் வயதாகும். ஒரு புதுக் கவிதை எங்கோ, எப்போதோ படித்தது. இப்போதும் நினைவில் இருக்கிறது.

'கூனல் விழுந்த கிழவரைப் பார்த்து இளைஞன் கேட்டானாம்... குனிந்தபடி எதைத் தேடுகிறீர்கள்? தொலைந்து போன என் இளமையை தேடுகிறேன்." என்றாராம்.

எத்தனை நிதர்சனமான வரிகள்? சிகரெட் விழிப்புணர்வு வாசகம் ஒரு வகையில் இதற்கும் பொருந்தும். சிகரெட் நுனியில் எரியும் தீக்கரை சொன்னது,'இன்று நான் நாளை நீ!" என்று. ஆம் முதுமையும் அப்படித் தான். "இன்று உன் அப்பா நாளை நீ.மறுநாள் உன் மகன்!"

முதியோரை மதிக்கும் பண்பை இளமையில் விதைக்க வேண்டும். அதற்கு சிறந்த வழி வாழ்ந்து காட்டுதல்தான். ஆம்... நம் பெற்றோரை, பிள்ளைகளின் முன்பு மரியாதையாக வாழவைத்துக் காட்டுங்கள். அதுதான் மிகச் சிறந்த பண்பு.

ஒவ்வொரு குழந்தைக்குமே அந்த குழந்தைப் பருவத்தில் அவர், அவர்களின் தந்தை தான் ஹீரோ. ஹீரோக்களால் அழகான உங்கள் நாள்களை எங்கோ ஒரு முதியோர் இல்லத்தில் சென்று சேர்க்கும் முன்னர் நீங்கள் எண்ணிப் பார்த்ததுண்டா? உங்களின் சோகங்களை தன் சோகமாக எண்ணி, உங்கள் சந்தோசங்களை, தன் சந்தோச மாக எண்ணி துள்ளிக் குதித்த உங்கள் தாயைக் குறித்து எண்ணிப் பார்த்ததுண்டா? ஆனால் இந்த நாள்களை எல்லாம் உதாசீனப் படுத்திவிட்டு, எங்கோ ஒரு விடுதியில் கொண்டு தாயை அடைத்து விட்டு, பிரமாண்டமாக வீடு கட்டி, அன்னை இல்லம் என பெயரிட்டுக் கொள்வது உன் முகத்தில் நீயே பூசிக் கொள்ளும் கரி என்பதை நீ உணரத் துவங்கும் நாள் எப்போது வரும்?

வயதான பெற்றோர்களை பராமரிக்காத பிள்ளைகள் மீது சட்டப்படி தண்டனை வாங்கிக் கொடுக்க முடியும். ஆனால் இதுவரை எத்தனை பெற்றோர்கள் நீதிமன்றக் கதவை தட்டியிருக்கிறார் கள்? எத்தனை குழந்தைகள் தண்டிக் கப்பட்டு இருக்கிறார்கள்? அதுதான் பாசம். அந்த ஒன்றுக்குத் தான் வயோதிபம் ஏங்குகிறது. "அப்பா... சாப்பிட்டீங்களா? அம்மா... சாப்பிட்டீங்களா? என்று கேட்கும் ஒற்றை கேள்வி போதும் , 70 ஆண்டுகள் வாழ்ந்த பிறவிப் பலனை முழுமையாய் தீர்த்துக் கொள்ள!" ஆனால் எத்தனை பிள்ளைகள் இதனை கேட்கிறார்கள்? வயோதிபத்தில் நோயுடன் தவிப்பவர்களை விட, தனிமையில் தவிப்பவர்கள் தான் அதிகம்.

எந்த இல்லத்தில் மூத்தோர்கள் இருக்கின்றார்களோ, அந்த இல்லத் தில் குடும்ப ஒற்றுமையும் தளைத்து ஓங்கும். விட்டுக் கொடுத்துச் செல்லும் பண்புக் கூறுக்கு இவர்கள்தான் அடித்தளம் இடுபவர்கள். குடும்ப உறவுகளுக்குள் இன்று எத்தனை, எத்தனை சிக்கல்கள் பீடித்துள்ளது? இதற்கெல்லாம் காரணம் என்ன? மூத்தவர்கள் வீட்டில் இல்லாதது தான். அரசுப் பணி செய்து ஓய்வூதியம், இயல்பி லேயே செல்வந்தர் என்னும் நிலையில் உள்ள முதியோரைக் கூட விட்டு விடுங்கள். ஏதோ ஒரு கடைநிலை பணி செய்து, தன் முழுச் சம்பளத்தையும், ஏனைய அனைத்தையும் குடும்பத்துக்கே போட்ட முதியவர்களின் வயோதிபத்தை எண்ணிப் பாருங்கள். இப்பிரச்சினையின் வீரியம் தெரியும்.

இன்று நீரிழிவு நோயும், இரத்த அழுத்தமும் இல்லாத முதியோரைப் பார்ப்பது அரிதினும், அரிதான ஒன்று. அதற்கு மருந்து, மாத்திரைகள் கூட வாங்கித் தர மனமின்றி போன பிள்ளைகளும் இருக்கிறார்கள் என்பது எவ்வளவு வேதனையான விசயம்.

(22ஆம் பக்கம் பார்க்க)

## குர்ஸ்க் நீர்மூழ்கி ... (16ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆழ்கடல் மீட்பில் இக்கப்பல்கள் பெயர் போனவை. இக்கப்பலின் ஆழ்துளை கேமராவை கடலுக்குள் செலுத்தியதில் குர்ஸ்க் கப்பலின் புகைப்படங்கள் கிடைக்கின்றன. கப்பலின் முன் பக்கம் சேதமடைந்த புகைப்படங்கள் கப்பல் விபத்தில் சிக்கியதை உறுதிசெய்கின்றன.

பழுதுபார்க்கப்பட்ட AS34 மீண்டும் காலை 5:00 மணிக்கு குழுவோடு கடலுக்குள் கிளம்பியது. 6:00 மணிக்கு குர்ஸ்க் கப்பலைக் கண்டுபிடிக்கிறது. குர்ஸ்க் நீர்மூழ்கி கப்பலின் முதல் தளம் முழுவதும் வெடித்திருப்பதை பார்க்கிறார்கள். கடல் சீற்றம், கடல் அழுத்தம் அதிகரிக்க AS 34 மீட்புப் பணியை கைவிட்டு மீண்டும் கப்பலுக்கு திருப்புகிறது. இயற்கையின் சீற்றத்தால் அன்றைய தினம் மீட்புப் பணியை கைவிடுவதாக அரசு அறிவித்தது.

ஆகஸ்ட் 14-ம் தேதி ரஷ்ய அரசு குர்ஸ்க் கப்பல் பற்றிய அதிகாரபூர்வ அறிவிப்பு ஒன்றை வெளியிடுகிறது. "குர்ஸ்க் அனுபவம் வாய்ந்த நீர்மூழ்கி கப்பல். இதில் ஏற்பட்ட சிறிய தொழில்நுட்ப கோளாறால் கடலுக்குள் இருக்கிறது. கப்பல் இருக்குமிடத்தை கண்டறிந்து அரசு கப்பலுடன் தொடர்பில் இருக்கிறது" என மக்களுக்கு தெரிவிக்கப்படுகிறது. எல்லோருடைய கேள்வியும் 118 பேர் எப்படி இருக்கிறார்கள் என்பது பற்றி மட்டுமே இருக்கிறது. மீட்பு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என அரசு சமாளிக்கிறது.

வலுவான அலைகள், கடற்பகுதி நீரோட்டங்கள் ஆகியவை செவ்வாய் மற்றும் புதன்கிழமைகளில் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான மீட்புக் குழுக்களின் திறனை மேலும் பலவீனப்படுத்தியது. அதாவது கப்பல் காணாமல்போன நான்காவது மற்றும் ஐந்தாவது நாள். ஆகஸ்ட் 15 மற்றும் 16-ம் தேதி. இதற்கிடையில் ரஷ்ய பத்திரிகைகள் பலவும் குர்ஸ்க் கப்பல் தேடுவதைப் பற்றி விமர்ச்சிக்க ஆரம்பிக்கின்றன. ரஷ்ய அரசு ஏன் மற்ற நாடுகளின் உதவியை ஏற்கமறுக்கிறது என விமர்சனம் செய்ய ஆரம்பிக்கிறார்கள். விமர்சனங்களுக்கு பதிலளித்த அரசு மற்ற நாடுகளின் உதவியை நாடியது.

சம்பவம் நடந்த ஏழாவது நாள். ஆகஸ்ட் 19. நார்வே அரசின் "நார்மன் பயனீர்" கப்பலும் பிரிட்டிஷ் அரசின் "LR 5" நீர்மூழ்கிக் கப்பலும் சம்பவ இடத்துக்கு வந்தடைகின்றன. குர்ஸ்க் நீர்மூழ்கிக் கப்பல் கடலின் 18 மீட்டர் அளவில் இருக்கும்பொழுது வெடித்ததை LR 5 உறுதி செய்கிறது. ரஷ்ய நார்வே பிரிட்டிஷ் நாடுகளின் கூட்டு நடவடிக்கையில் குர்ஸ்க் கப்பலின் ஒவ்வொரு பகுதியாக ஆராய்கிறார்கள். குர்ஸ்க் கப்பலின் அனைத்து வால்வுகளும் அடைத்துக் கொண்டிருப்பதால் அவற்றை உடைத்து உள்நுழைய முயற்சிக்கிறார்கள். ஆனால், அது அவ்வளவு சுலபமான வேலையாக அவர்களுக்கு இருக்கவில்லை. குர்ஸ்க் கப்பலின் எல்லாத் தளங்களும் பாதிக்கப்பட்டிருப்பதால் கப்பலின் பேட்டரிகள் முழுவதும் செயலிழந்துவிட்டன. நீர்மூழ்கிக் கப்பலின் ஒன்பதாவது தளத்தின் வால்வை உடைத்துப் பார்க்கும்போது கப்பல் முழுவதும் நீர் சூழ்ந்திருக்கிறது. கப்பல் முழுதும் நீர் சூழ்ந்திருப்பதால் கூட்டுப் படைகளால் கப்பலுக்குள் செல்வது கடினமாகிறது. கம்பி வடிவ கேமராவை ஒன்பதாவது தளத்தில் செலுத்தி படம் பிடித்ததில் சில இறந்துபோன உடல்கள் கிடப்பது உறுதிசெய்யப்படுகிறது.

அன்றைய தினம் மீட்பு பணியிலிருந்த நார்வே மற்றும் பிரிட்டிஷ் குழுக்கள் கடற்பரப்புக்குத் திரும்பி வருகிறார்கள். ராயல் நேவி தளபதி ருஸ்சில் மலர் தூவி இறந்தவர்களுக்கும் குர்ஸ்க் கப்பலுக்கு அஞ்சலி செலுத்துகிறார். குர்ஸ்க் கப்பலும் இறந்த உடல்களும் மீட்கப்படாமல் கடலுக்குள் கிடக்கிறது.

விபத்துக்கான காரணம் அறிய அமைக்கப்பட்ட குழு தனது அறிக்கையைச் சமர்ப்பிக்கிறது. குர்ஸ்க் கப்பலில் பராமரிக்கப் படாமல் பல ஆண்டுகள் டார்பிடோ அறையில் இருந்த பெராக்ஸைட் டார்பிடோவின் கசிவே விபத்துக்கு காரணம் என கண்டறிகிறது. முழுவதும் தயாரிக்கப்பட்ட ஹைட்ரஜன் கெமிக்கள்களால் டார்பிடோ நிரப்பப்பட்டிருக்கும். பெராக்ஸைட் டார்பிடோவுக்கு கெரோஸின் எரிபொருளாக பயன்படுத்தப்படுகிறது. காப்பரின் அழுத்தம் அதிகரிக்கும்போது டார்பிடோ வெடிக்கும் விதமாக வடிவமைக்கப்பட்டிருக்கும். உயர் அழுத்ததில் வெடிக்கிற டார்பிட்டோ 5000 டிகிரி வெப்பத்தை வெளிப்படுத்தும். 1939 இரண்டாம் உலகப் போரில் இவ்வகையான டார்பிடோக்களை பிரிட்டிஷ் மற்றும் அமெரிக்க நாடுகள் பயன்படுத்தின. 1960-ம் ஆண்டு இவ்வகையான டார்பிடோக்களை இரண்டு நாடுகளுமே பயன்படுத்தப்போவதில்லை என அறிவித்தன. காரணம் பெராக்ஸைடு டார்பிடோக்கள் மிகப் பெரிய விளைவை ஏற்படுத்தக் கூடியவை. அவற்றின் தாக்கம் பல ஆண்டுகளுக்கு இருக்கும். குர்ஸ்க் கப்பலில் இருந்த டார்பிடோ கசிய ஆரம்பித்து கார்பன் அழுத்தத்தில் வெடித்திருக்கிறது. வார்ஹெட் பொருத்தாமல் இருந்த மற்ற டார்பிடோக்களும் வெடிக்க கப்பல் மூழ்கியதாக அறிக்கை கொடுத்திருக்கிறார்கள்.

குர்ஸ்க் கப்பலில் யாரும் உயிரோடு இல்லை என்பது உறுதி செய்யப்படுகிறது. விபத்து நடந்த பத்தாவது நாள் (ஆகஸ்ட் 21-ம் தேதி) ரஷ்ய வடக்குக் கடற்படை ரஷ்ய மக்களுக்கு அதிகாரபூர்வ அறிக்கையை வெளியிடுகிறது. "குர்ஸ்க் கப்பல் முழுவதும் தண்ணீர் சூழ்ந்திருப்பதால் மீட்புப் பணிகள் தாமதமாகிறது. கப்பலில் யாரும் உயிரோடு இல்லை. உடல்கள் விரைவில் மீட்கப்படும்" என தெரிவிக்கிறது. விபத்துக்கான காரணம் அதுவரை சொல்லப்படவில்லை. ரஷ்ய கடற்படை தங்களது புகழுக்கு கேடு வரும் என நினைப்பதால் உண்மையை மறைக்கிறார்கள் என பத்திரிகைகள் எழுதுகின்றன. இறந்துபோனவர்களின் உறவினர்களை ரஷ்ய பிரதமர் புதின் சந்தித்துப் பேசுகிறார். இறந்தவர்களின் குடும்பங்களுக்கு இழப்பீடு வழங்கப்படுகிறது. குர்ஸ்க் நீர்மூழ்கிக் கப்பல் பற்றிய விவாதங்களும் விமர்சனங்களும் தொடர்ந்துகொண்டே இருக்கின்றன.

விபத்து நடந்து 11 மாதங்கள் கழித்து 2001 வருடம் ஜூலை மாதம் டச்சு கம்பனி வசம் குர்ஸ்க் கப்பல் மீட்கும் பொறுப்பை ரஷ்யா ஒப்படைக்கிறது. அவர்கள் பல தொழில்நுட்பங்களை பயன்படுத்தி கப்பலை மீட்கப் போராடுகிறார்கள். கடைசியாக அக்டோபர் 8-ம் தேதி போலந்து நாட்டிலிருந்து கொண்டுவரப்பட்ட ஜெயண்ட் கப்பல் விபத்து நடந்த இடத்தில் நிறுத்தப்படுகிறது. ஜெயண்ட் கப்பலின் 26 கடினமான கம்பிகள் கொண்டு கப்பலை மீட்க முடிவு செய்யப்படுகிறது. ஒவ்வொரு கம்பியும் 900 டன் எடையைத் தாங்குபவை. குர்ஸ்க் கப்பலின் மேற்பகுதியில் துளையிட்டு 26 கம்பிகளும் குர்ஸ்க் கப்பலோடு இணைக்கப்படுகின்றன. இணைக்கப்பட்ட கம்பிகளை தொழில்நுட்ப உதவியைப் பயன்படுத்தி குர்ஸ்க் கப்பலை ஆழ்கடலிருந்து ஜெயண்ட் கப்பல் மீட்கிறது. குர்ஸ்க் கப்பல் இருந்த இடத்தில் பூக்களை வைத்து அஞ்சலி செலுத்திவிட்டு ஒட்டு மொத்த குழுவும் திரும்புகிறது.

பதினைந்து மணி நேர போராட்டத்துக்குப் பிறகு அக்டோபர் 23-ம் தேதி குர்ஸ்க் கப்பல் மீட்கப்பட்டு கடலின் மேற்பரப்புக்குக் கொண்டு வரப்படுகிறது. கப்பலின் கடல் நீர முழுதும் வெளியேற்றப்படுகிறது. கப்பலிலிருந்து இறந்துபோன உடல்கள் மீட்கப்படுகின்றன. 118 பேரில் மூன்று பேருடைய உடல்களைத்தான் அடையாளம் காண முடிந்தது.

மிகப்பெரிய துயரத்தை சுமந்தபடி கடற்பரப்புக்கு குர்ஸ்க் வந்த நாள் தொழில்நுட்ப வரலாற்றில் ஒரு கறுப்பு நாள்.

## மாணவி வித்தியாவுக்கு... (08ஆம் பக்கத் தொடர்ச்சி)

இது போன்ற விடயங்களை இன்னும் பலப்படுத்துமாறு யாழ். பல்கலைக்கழக நிர்வாகத்தின் நடவடிக்கைகள் அமையப்பெற வேண்டும் என்று விசாரணைக் குழு குறிப்பிட்டிருப்பது அவர்கள் நீதி நியாயத்தோடு செயற்பட்டதையே காட்டுகிறது.

இருந்தும் பல்கலைக்கழகத்தில் இடம்பெறும் பல தவறுகளுக்கு நிர்வாகமே பொறுப்பென்பதால் முறைமுகமாக நீங்களே அவற்றிற்குப் பொறுப்பாகவும் இருக்கிறீர்கள் என்றது எனது எண்ணம். எனவே தங்களுக்கீழ் அதிகாரத்தில் உள்ளவர்களை இனம் காணவேண்டுமென்பது தங்களது கடமை என்பது எனது எண்ணம். இந்த விடயத்தில் யாழ். பல்கலைக் கழகத்திற்குச் சொந்தமான விருந்தினர் விடுதியில் இருக்கின்ற வரவுப் பதிவேடு சரியான முறையில் பேணப்படுவதில்லை என்பதும் முக்கியமான குறைபாடே. அத்துடன் அங்கு விருந்தினர் தங்க வேண்டிய கால எல்லை வரையறுக்கப்பட வேண்டும். அதுவும் அங்கு தங்கியிருந்தவர்களும் அதை ஒரு காரியாலய ரீதியிலான வதிவிடம் என்று கருதாமல் உல்லாச ஹோட்டல் போன்று - சுருக்கமாகக் கூறின் - தல்செவன போன்று உபயோகிப்பதும் அங்கு தங்களுக்கான விருந்தினரை வரவழைத்து மகிழ்வூட்டுவதும், அவர்கள் அங்கு பணியாற்றுபவர்களோடு கொடுக்கல் வாங்கலில் ஈடுபட்டது, உணவுப் பொருட்களைப் பகிர்ந்து உண்பது எனப் பல தடவை தமது எல்லை மீறல்களான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கின்றமையும் விசாரணைகளில் தெளிவாகியுள்ளது. யாழ். பல்கலைக்கழகத்தில் பணியில் உள்ளவர்களுக்கு அதாவது கல்விசார் ஊழியர்கள், கல்விசாரா ஊழியர்கள் மற்றும் நிர்வாக அலகிலுள்ளவர்கள் என்று அனைவருக்கும் ஆண், பெண் ஊழியர்களுடன் எப்படி ஒழுக்கமாக நடந்து கொள்ள வேண்டும், மற்றும் பாலியல் வன்முறைகள் தொடர்பான கட்டாய பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும். அதாவது பல்கலைக்கழகத்தினுள் பாலின நடவடிக்கைகளில் அவதானத்துடன் செயற்படுவதற்கும், அத்தகைய செயற்பாடுகளைத் தவிர்க்கவும் வழிவகுக்க வேண்டும். கடந்த ஒகஸ்ட் 2017 பல்கலைக்கழகப் பேரவையால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பாலினம் தொடர்பான சட்டங்கள் அனைத்தும் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் அனைவருக்கும் அறியப்படுத்த வேண்டும்.

இதை நீங்கள் எந்த வகையில் ஏற்றுக் கொள்ளப் போகிறீர்கள் என்பது நான் அறியாத விடயம். வித்தியா கூட்டுவன்புணர்வின் பின்னரான கொலை வழக்கில் கிடைத்த நீதி போன்று இலங்கையில் - உலகில் இருக்கும் அனைத்துப் பெண்களுக்கும் நீதி கிடைக்க வேண்டும் என்பதே எனது அவா. அந்த வகையில் சமூகப் பொறுப்புணர்வுடன் இந்தக் கடிதத்தை எழுதியிருக்கிறேன். எனவே பல்கலைக்கழகத்தில் நடந்த கோளாறுகளையும், அநாகரிகங்களையும் முறைப்படி விசாரித்து ஆவன செய்தால் யாழ். பல்கலைக்கழகம் ஒரு தலை சிறந்த நிறுவனமாக மாறும். இல்லை சிலரைத் திருப்திப் படுத்த வேண்டும் என்ற தேவை இருந்தால் அது அப்படியே இருக்கட்டும்

நன்றி

இப்படிக்கு


சிறாப்பர் செல்லப்பா



இம்சை அரசன் 24 ஆம் புலிகேசி படத்தில் தற்போது நடித்து வருகிறார் வடிவேல். அவர் நடித்த இரு படங்கள் தோல்வியைத் தழுவியதால் இந்தப் படத்தை பெரிதும் நம்பியுள்ளார்.

இந்நிலையில் "நீயும் நானும் நடுவில பேயும்" என்ற படத்தில் நடிக்கவுள்ளார். இம்சை அரசன் படப்பிடிப்பு முடிந்த பின்னரே அந்தப் படத்தில் வடிவேல் நடிப்பாராம்.





2.0 படத்தின் நாயகியான எமி ஜக்சன், அமெரிக்கா, கனடாவின் பிரபல தொலைக்காட்சி ஒன்றின் தொடரில் நடிக்கவுள்ளார்.

சனிக்கிரகத்தின் நிலவான டைட்டனில் பிறந்து வளரும் சுப்பர் கேர்ள் பூமிக்கு ஏற்படும் பேராபத்தை எப்படி தடுக்கிறார் என்பதே இத்தொடரின் கதை.

இதில் "இர்மா அர்தீன்" என்ற வலுவான பாத்திரத்தில் எமி நடிக்கவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



# எதிர்பாராத முடிவு

ஜேர்மனியில் நடைபெற்று வரும் புண்டலிஸ்கா லீக் தொடரில் நடப்புச் சம்பியனான பெயோர்ண் முனிச் அணியின் முகாமையாளரான கார்லோ அஞ்சலொற்றி கடந்த வாரம் பதவியில் இருந்து அதிரடியாக நீக்கப்பட்டுள்ளார். இது குறித்து அணி நிர்வாகம் "இந்தப் பருவ காலத்தில் எதிர்பார்த்தளவிற்கு அணியின் திறமை வெளிப்பாடுகள் போதுமானதாக அமையாததால் இம்முடிவு எடுக்கப்பட்டதாக" தெரிவித்துள்ளது.

கடந்த பருவகாலத்தில் தான் பெயோர்ண் முனிச் அணியுடன் ஒப்பந்தமான கார்லோ அஞ்சலொற்றி முதல் தடவையே புண்டலிஸ்கா லீக் கிண்ணத்தையும் வென்று கொடுத்திருந்தார். இந்நிலையில் அவரது பதவிக்கு எந்தவித ஆபத்தும் வராது என்ற நிலையே காணப்பட்டது. ஆனால் இந்தப் பருவகாலத் தொடரில் இதுவரை விளையாடிய 6 போட்டிகளின் முடிவில் பெயோர்ண் முனிச் 4 வெற்றிகள் பெற்று 13 புள்ளிகளுடன் மூன்றாமிடத்தில் உள்ளது. குறிப்பாக ஹொபன்கெம் அணிக்கெதிரான போட்டியில் 2 : 0 என்று அடைந்த தோல்வியும் வூல்ஸ்பேர்க் அணிக்கெதிரான போட்டி 2 : 2 என்று சமநிலையில் முடிந்ததும் ஜேர்மனி வீரரான தோமஸ் முல்லரை ஆடும் பதினொருவர் அணியில் உள்ளடக்காமையும் அவர் மீது விமர்சனத்தை ஏற்படுத்தி இருந்தது.

இந்நிலையில் கடந்தவாரம் நடந்து முடிந்த பி.எஸ்.ஜி அணிக்கெதிரான சம்பியன்ஸ் லீக் போட்டியில் 3 : 0 என்று பெயோர்ண் முனிச் தோல்வி அடைந்தது. அப்போட்டியில் அணியின் முக்கிய வீரர்களான பிராங் றிபரி, அர்ஜென் றொபன் ஆகிய வீரர்களை ஆட்டத்தின் ஆரம்பம் முதலே பயன்படுத்தாமல் மாற்று வீரராகப் பயன்படுத்தி இருந்தமையும் அதிருப்தியை ஏற்படுத்தி இருந்தது. இந்தத்தோல்வியின் பின்னரேயே அவர் நீக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. தற்போது கார்லோ அஞ்சலொற்றிக்கு உதவியாளராக விளங்கிய வில்லி சாக்னோல் அணியின் இடைக்கால முகாமையாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இத்தகைய விமர்சனங்கள் ஒருபுறம் இருந்தாலும் புண்டலிஸ்கா லீக் தொடரில் பெயோர்ண் முனிச் அணிக்கு இன்னும் 28 போட்டிகள் மீதமுள்ளன. எனவே இச்சரிவில் இருந்து மீண்டு வருவதற்கான வாய்ப்பு நிறையவே உள்ள நிலையில் கார்லோ அஞ்சலொற்றியின் பதவி நீக்கத்தை ஏற்றுக்கொள்வது ரசிகர்களுக்குச் சங்கடமாகவே இருக்கும் எனலாம்.

# முடிவு உங்கள் கையில்

கடந்த சில வருடங்களாகவே டெஸ்ட் போட்டிகளின் நாட்களை 4 நாட்களாகக் குறைக்க வேண்டும் என்ற கோரிக்கை எழுந்தது. இதற்கு ஆதரவும் எதிர்ப்பும் இருந்தாலும் பாரம்பரியத்தை மீறுவதில் ஏற்படும் சங்கடத்தால் அந்தக் கோரிக்கை பரிசீலனையில் இருக்கின்றதே தவிர அது குறித்த இறுதித் தீர்மானம் இதுவரை எடுக்கப்படவில்லை. இந்நிலையில் தென்னாபிரிக்க கிரிக்கெட் சபை எதிர்வரும் டிசெம்பர் மாதம் 26 ஆம் திகதி சிம்பாப்வேயுடன் 4 நாட்கள் கொண்ட டெஸ்ட் போட்டி ஒன்றில் விளையாடுவதற்கு தற்போது ஐசிசியிடம் அனுமதி கோரி உள்ளது. இம்மாதம் நடைபெறவுள்ள ஐ.சி.சி. கூட்டத்தில் இது தொடர்பான இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் எனத் தெரிகிறது. இதற்கு ஐ.சி.சி. அனுமதி வழங்கினால் இப்போட்டியே நான்கு நாட்கள் நடைபெறும் முதற் டெஸ்ட் போட்டி என்ற பெருமையைப் பெற்றுக்கொள்ளும்.

காலமாற்றத்திற்கு ஏற்ப போட்டிகளின் வடிவங்களும் மாற வேண்டியது அவசியமே. ஆனாலும் அண்மையில் தான் டெஸ்ட் போட்டிகளுக்கான ஆயுளை அதிகரிக்கும் நோக்கில் அயர்லாந்து, ஆப்கானிஸ்தான் அணிகளுக்கு டெஸ்ட் அந்தஸ்தை ஐ.சி.சி. வழங்கி இருந்தது. ஆனால் நான்கு நாள் டெஸ்ட் போட்டிகளுக்கு ஐ.சி.சி. அனுமதி வழங்கினால் அந்த நோக்கத்திற்கு முரணாகச் செயற்படுவதாக அமைந்துவிடும்.



தொகுப்பு :- சி.விமலன்

ஏனென்றால் டெஸ்ட் போட்டிகளின் நாள் குறைப்பு வீரர்களின் இயல்பான ஆட்டத்தை வெளிப்படுத்துவதில் தாக்கத்தைச் செலுத்த வாய்ப்புள்ளது. அத்தோடு இருபதுக்கிருபது போட்டிகளின் ஆக்கிரமிப்பால் டெஸ்ட் போட்டிகளில் தனித்துவமான முத்திரை பதிக்கும் வீரர்கள் அருகி வரும் இன்றைய சூழலில் அத்தகைய வீரர்களின் தோற்றுவாய்க்கும் இது பின்னடைவை ஏற்படுத்தி விடும்.

# முடிவல்ல ஆரம்பம்

இங்கிலாந்து பிறீமியர் லீக் உதைபந்தாட்டத் தொடரில் செல்சி அணி சார்பில் விளையாடி வரும் வீரர்தான் டியாகோ கோஸ்ரா. 2014 ஆம் ஆண்டு ஸ்பெயினின் அத்லெட்ரிக்கோ மட்ரிட் கழகத்திலிருந்து செல்சி கழகத்திற்கு ஒப்பந்தமான இவர் தற்போது மறுபடியும் அத்லெட்ரிக்கோ மட்ரிட் அணிக்கு மாறவுள்ளமை உறுதியாகி உள்ளது.

செல்சி சார்பில் 89 போட்டிகளில் விளையாடிய கோஸ்ரா 52 கோல்களை அடித்துள்ளார். கடந்த மூன்று வருடங்களில் இரண்டு தடவைகள் செல்சி பிறீமியர் லீக் தொடரில் கிண்ணம் வென்றதில் அவரது வகிபங்கும் காத்திரமாக இருந்தது. ஆனாலும் அண்மைக்காலமாக கோஸ்ராவுக்கும் செல்சியின் முகாமையாளரான அன்ரனியோ கொன்ரேக்கும் இடையில் முரண்பாடுகள் அதிகரித்தது. இந்த ஆண்டுத் தொடக்கத்தில் 'கோஸ்ரா இனி அணிக்குத் தேவைப்படமாட்டார்' என்று கொன்ரே கூறிய கருத்து அதனை ஊர்ஜிதப்படுத்தி இருந்தது.

இந்நிலையில் ஸ்பெயினில் இருந்து வெளிவரும் பத்திரிகை ஒன்று 55 மில்லியன் யூரோக்களுக்கு அத்லெட்ரிக்கோ மட்ரிட் கோஸ்ராவை ஒப்பந்தம் செய்வதற்கு உடன்பட்டுள்ளதாகச் செய்தி வெளியிட்டுள்ளது. அதை ஆமோதிக்கும் விதமாக சில தினங்களுக்கு முன்னதாக கோஸ்ரா செல்சி அணியுடன் இணைந்து இதுவரை விளையாடியதற்கு நன்றியும் அவரது எதிர்காலம் சிறப்பாக அமைவதற்கு தனது வாழ்த்துக்களையும் கொன்ரே கடந்தகாலக் கசப்புக்களை மறந்து இங்கிதமாகத் தெரிவித்துள்ளார். உண்மையில் முகாமையாளருடனான முரண்பாட்டால் சில மாதங்களாகவே மன உளைச்சலில் இருந்த கோஸ்ராவுக்கு இந்த ஒப்பந்தம் அமைந்தது வரப்பிரசாதமாவே கருதப்படுகின்றது.




இந்தப் பத்திரிகை லக்ஷ்மி பிறின்டர்ஸ் (பிறைவேற்) நிறுவனத்தால் 07.10.2017 அன்று 107, இராச வீதி, கோப்பாய் - திருநெல்வேலி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.